
மஞ்சள் ஆறு
சாண்டில்யன்

...ஹிந்து தர்மத்தின்,
...ங்களை வீழ்த்தி விட்டது.

...ழுவதும் பெரும் சாகஸச்
...பில், 80 போர்க்காயங்கள்
... கீர்த்திக்கும் அத்தாட்சி

...தையை இந்த ‘மஞ்சள்
...பெருமையடைகிறேன்.
...படி ஒரு மகாவீரன் நமது
...த நினைத்துப் பெருமிதம்
...றேன்.

...டமான சரித்திர ஆதாரம்
...க்கும் பெரிதும் பயன்

-சாண்டில்யன்

# மஞ்சள் ஆறு

### அத்தியாயம்-1

## புலிமலைக் கோயில்

நாஹ்ராமக்ரோ என்ற புலிமலை உச்சியை மாலை நேர மஞ்சள் கதிர்கள் தழுவிக் கிடந்ததால், ஏற்கெனவே செடி கொடிகள் அதிகமின்றி உடைந்த பாறைகளுடனும் அந்தப் பாறைகளிலிருந்து உதிர்ந்து அக்கம் பக்கத்தில் பதிந்து கிடந்த சின்னஞ்சிறு மணல் திட்டுகளுடனுமிருந்த அந்த மலைப்பிரதேசம் சொர்ணச் சாயைக் கொஞ்சம் அதிகமாகவே பெற்றிருந்ததல்லாமல், மலையுச்சியிலிருந்த சாருணீ தேவியின் ஆலயத் தங்கக் கலசங்கள் வெயிலில் ஜாஜ்வல்லியமாக மின்னி, மேவார் நாட்டில் கதிரவனையும் தோற்கடிக்கும் ஒளிப் பிழம்புகள் பல உண்டு என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அந்தப் பாலைவன நாட்டின் உஷ்ணத்தையும் உக்கிரத்தையும் தப்பி முளைத்துவிட்ட சிற்சில செடிகள், திருடர்களைப் போல் மலைப்பாறை இடுக்குகளிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. அரசனிலிருந்து ஆண்டி வரை சகலரும் சந்தேகம் தவிர்த்துக் கொள்ள வரும் அந்தச் சாருணீ தேவியின் ஆலயத்தின்

பிரசித்தி ராஜ்புதனம் முழுவதும் பரவிக் கிடந்தபோதிலும், அதிலிருந்து உச்சிக்குச் செல்லும் பாதைக்கு படிகள் ஏதும் அமைக்கப்படாமல் பாறைகள் மட்டும் ஆங்காங்கு வெட்டி விடப்பட்டிருந்ததால், எந்த நிமிஷத்திலும் கூழாங்கற்களில் வழுக்கி மலையடிவாரத்துக்கு மனிதனோ மிருகமோ வந்துவிடும் பயங்கர நிலையில் அந்தப் பாதையிருந்தது. ஆகவே மிகவும் அவசியமிருந்தாலொழிய அந்த மலையுச்சியை யாருமே நாடும் வழக்கமில்லாதிருந்ததின் விளைவாக அந்த மலைப்பிராந்தியத்தில் மனிதர் நடமாட்டம் ஏதுமில்லாமல் ஒரு பயங்கரச் சூழ்நிலை சதா சூழ்ந்து கிடந்தது. மலையின் பாதை மட்டுமின்றி மலை உச்சியை அடைந்த பின்பு அங்குள்ள ஆலயத்தில் குடி கொண்டிருந்த மகா துர்க்கையான சாருணீ தேவியின் உக்கிர சொரூபமும் அச்சத்தை அள்ளி வீசும்படியாயிருந்ததால், கூடியவரை ராஜபுதனவாசிகள் அந்த மலை உச்சிக்குப் போவதைத் தவிர்த்தேயிருந்தார்கள். போனவர்கள் வெகு சிலர். வாழ்க்கையின் பெரும் சிக்கலுக்கு மருந்து தேடியவர்களே தேவியின் ஆலயத்துக்குச் சென்றார்கள். சாதாரணமாக அந்த மலை ஜனசஞ்சாரமற்றே கிடந்தது. சிறிது ஆசாரம் தவறினாலும் சாருணீ தேவியின் கண்வீச்சு குடும்பத்தை நாசம் செய்துவிடும் என்ற நம்பிக்கை மனிதர்களை 'நாஹ்ராமக்ரோ' விலிருந்து சற்று எட்டவே வைத்திருந்தது. ஆனால், சாருணீ தேவிக்குப் பூஜை செய்யும் அந்த தபஸ்வினி எப்படி அங்கே வசிக்கிறாள்? அவளுக்கு எப்படி ஆகாரம் கிடைக்கிறது? இந்தக் கேள்விகள் எதற்கும் ஜனங்களுக்கு விடை கிடைக்காமலிருக்கவே, அவர்கள் தபஸ்வினிக்கு உள்ள சக்தியைவிட அதிகச் சக்திகளைக் கற்பித்து அந்த மலைப் பக்கம் நாடுவதை அறவே தவிர்த்திருந்தார்கள்.



இப்படிப் பல வகையிலும் ராஜபுதன மக்களுக்குப் பீதியையும் பக்தியையும் அளித்துவந்த நாஹ்ராமக்ரோவின் கடிய பாதையில், அந்த மஞ்சள் வெயிலில் நான்கு புரவிகள் மெள்ள ஏறிச் சென்றன. புரவிகளிலிருந்த நால்வருமே அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களென்பதை அவர்கள் புரவிகளுக்கிருந்த சேணங்களின் அலங்காரங்களும் நிரூபித்தனவென்றாலும் ஒவ்வொருவர் தோற்றத்திலும் பெரும் வித்தியாசம் மண்டிக் கிடந்தது. பாதை மிகக் குறுகலாகவும் அபாயமாகவுமிருந்ததால் புரவிகள் அக்கம் பக்கத்தில் மிகவும் கஷ்டப்பட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. அப்படிச் சென்ற அந்த வரிசையைப் பார்ப்பவர்களுக்குப் புரவி வீரர் நால்வருக்குமிருந்த விபரீத வித்தியாசங்கள் சிறிது விந்தையையே அளித்திருக்கும். அத்தகைய விந்தைக் கண்களுடனேயே மலையுச்சியிலிருந்த ஆலயத்தின் முகப்புப் படியில் நின்று சாருணீ தேவியின் பூஜாரிணியான தபஸ்வினியும், கீழிருந்து மலையுச்சியை நாடி வரும் அந்த நான்கு மனிதர்களையும் பார்த்தாள். நடுப்புரவியிலிருந்தவன் நல்ல வயோதிகனென்பதையும், அதற்கு முன் வந்தவன் சற்று உயரம் குறைந்திருந்தாலும் நல்ல தேகக்கட்டுடன் விளங்கிய வாலிபனென்பதையும் புரிந்துகொண்ட தபஸ்வினி, அவனையடுத்து வந்த புரவியிலிருந்த ஆஜானுபாகுவான வாலிபனையும் அவன் சேணத்தைப் பிடித்திருந்த அலட்சியத்தையும் கண்டு, 'எத்தனை துடுக்கான வாலிபன்! எதற்கும் அஞ்சாதவன்; மிகவும் முன்கோபி! ஊஹூம், இவனால் நாட்டுக்கு நன்மை விளையாது!' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாளானாலும், மிகவும் உயரமும் கட்டும் வாய்ந்த அவன் சரீரத்தைக் கண்டு வியக்கவே செய்தாள். கடைசிப் புரவியில் வந்த சிறுவனை அலட்சியம் செய்து விலக்கிய அவள் கண்கள், நடுப்புரவியிலிருந்த வயோதிகனையும்

விலக்கிவிட்டு முன்னாலிருந்த இரு சகோதரர்களையும் மாறிமாறிக் கவனித்த பின்பு, உயரமான அந்த வாலிபனிடம் முதலில் இருந்த பிரமையை இழந்து, அதிக உயர மில்லாதவனாய் இருப்பினும் பலத்திலோ வாலிபக் கட்டிலோ சிறிதும் குறையாதவனும், வயோதிகனுக்கு முன்புரவியில் வந்துகொண்டிருந்தவனுமான வாலிபனிடம் மாற்றிக் கொண்டன.

அதிக உயரமில்லாததோடு திண்மையான தேகக் கட்டுமிருந்ததன் காரணமாகச் சற்று குள்ளமாகத் தெரிந்த அந்த வாலிபன், திடமாகக் குதிரையில் அமர்ந்திருந்ததை யும், தலையைச் சற்றே உயர்த்தி மலையுச்சியை அவன் நோக்கிய சமயத்திலும் ஒரு நிதானம் அந்த தலையின் அசக்கலில் இருந்ததையும் மேலிருந்தே ஓரளவு கண்ட தபஸ்வினியின் முகத்தில் சற்று சாந்தி நிலவியதால், அவள் இதழ்கள் புன்முறுவலால் சற்றே விகசித்தன. அவனைக் கண்டதால் சாந்தியும் சந்துஷ்டியுமடைந்த தபஸ்வினி, தூரத்தே மற்றொரு மலைவாயிலில் விழுந்து கொண்டிருந்த மாலைக் கதிரவனையும் அந்த வாலிபனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுத் திடீரென ஆலயத்துக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

அவள் ஆலயத்தின் முகப்புப் படியில் சிறிது நேரம் நின்று தங்களை நோக்கியதையும், பிறகு கதிரவனை நோக்கிவிட்டு ஆலயத்துக்குள் சென்றுவிட்டதையும் கண்ட முதல் புரவி வீரன், நடுவில் வந்துகொண்டிருந்த வயோதி கனை அழைத்து, ''மாமா! அதோ அந்தப் படியில் நின்றாளே, அவள் யார்?'' என்று கேட்டான்.

சித்தூர் ராணா ரேமல்லனின் மைத்துனரும், புரவியில் வந்த மூவருக்கும் மாமனுமான சூரஜ்மல், பாதையிலிருந்த



பயங்கரத்தின் காரணமாகத் தலையைத் திருப்பாமலே, ''லங்கா! அவள்தான் தபஸ்வினி, சாரணீ தேவியின் பூஜாரிணி!'' என்று பதில்சொன்னார்.

இதைக் கேட்டதும் பக்கத்துப் புரவியில் மிகவும் ஆஜானுபாகுவாய் இருந்த ராணாவின் மைந்தனான பிருத்விராஜன், ''மாமா! நம்மைக் கண்டதும் அவள் ஏன் ஓடிவிட்டாள்? வீரர்களைக் கண்டால் பூஜாரிணிக்குப் பயமா?'' என்று வினவி, ஒரு முறை கேலியாகவும் சிரித்தான்.

''பிருத்விராஜ்! துடுக்குத்தனத்துக்கு இது இடமில்லை. சாருணீதேவியின் பூஜாரிணி பெரியதபஸ்வினி! மதிப்புக் குரியவள்! உன் சகோதரன் லங்கன் எவ்வளவு மரியாதை யுடனும் அடக்கத்துடனும் கேள்வி கேட்டான், பார்த்தாயா? உனக்கு மட்டும் ஏனிந்தத் துர்ப்புத்தி'' என்று கடிந்து கொண்டார் சூர்ஜ்மல்.

''அரச வம்சத்தினர் ஆளும் மன்னனைத் தவிர வேறு யாரிடமும் மரியாதை காட்டவேண்டிய அவசிய மில்லையே, மாமா'' என்றான் பிருத்விராஜன், அந்தப் பயங்கரப் பாதையிலும் குதிரையில் சற்று அனாவசிய மாக ஏறி நின்று.

''தவறு, பிருத்வீ! அரசர்கள் குடிகளுக்குத் தெய்வம். ஆனால், அரசர்களுக்கும் மேற்பட்ட சக்தியிருக்கிறது. அது நமது ஆலயங்களிலும் தபஸ்விகளிடமும் மண்டிக் கிடக்கிறது. ஆகவே, அந்த இடங்களில் அரச வம்சத்தினர் சிரங்களும் வணங்கத்தான் வேண்டும்'' என்றான் லங்கன், குதிரையிலிருந்து அனாயாசமாகத் திரும்பித் தம்பியை நோக்கி.

''நம்மிடமுள்ள கத்தியைவிடச் சிறந்த ஆயுதம் தபஸ்வினியிடமிருக்கிறதா?'' என்று இறுமாப்புடன் வினவினான் பிருத்விராஜன்.

ஸங்கனிடமிருந்து பதில் நிதானமாகவே வந்தது. ஸங்கனின் விசாலமான கண்கள் நன்றாக மலர்ந்து விழித்து சகோதரனான பிருத்விராஜனை நோக்கின. ''இருக்கிறது, ஆயிரம் வாள்களைவிடச் சிறந்த ஆயுதம் அவர்களிடமிருக்கிறது'' என்றான் ஸங்கன்.

''என்ன ஆயுதம் அது? எந்தக் கரத்தில் சுழல்கிறது? சொல், ஒரு கை பார்த்துவிடுகிறேன்'' என்று சீறினான் பிருத்விராஜன்.

''தபஸ்தான் அந்த ஆயுதம். அது கரங்களில் சுழல்வதில்லை; இதயத்தில் சுழல்கிறது. அதற்குக் கேடயமும் உண்டு. அதுதான் சாந்தி. உன்னிடமுள்ள துடுக்கை தபஸ்விகளிடம் காண முடியாது. ஆத்திரமும் அவசரமும் தபஸின் விரோதிகள் என்பது சாஸ்திரம்'' என்றான் ஸங்கன்.

''என் அண்ணா! இத்தனை அறிந்திருக்கும் நீ துறவியாகி விடலாமே. அரசு யாருக்கு என்பதைப் பற்றிக்குறி கேட்க எதற்காக ஆலயத்திற்கு வருகிறாய்? நீ இல்லையேல் அடுத்தபடி மேவார் மகுடத்தைச் சூடவேண்டியவன் நான்தானே?'' என்று பிருத்விராஜன் கேட்டபோது, அவன் குரலில் பொறாமையும், ஸங்கனிருப்பதால் தனக்கு அரசு கிடைப்பது துர்லபமாயிற்றே என்ற நினைப்பால் ஆக்ரோஷமும் நிறைந்திருப்பதை சூரஜ்மல் கண்டார். ஆகவே சகோதரர் சம்பாஷணைக்குள் அவர் புகுந்து, ''பிருத்விராஜ், முறைகெட்ட பேச்சு வேண்டாம். நீங்கள் இருவர் மட்டுமின்றிக் கடைசியில் வரும் உங்கள்



ஜெய்மல்லும் சாருணீ தேவியின் வாக்குக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக உறுதிமொழி கூறியிருக்கிறீர்கள். பேசாமல் வாருங்கள். உங்கள் மூவரில் மேவார் அரியணையில் யார் அமருவார் என்பதை சாருணீதேவியின் அனுக்கிரகத்தால் தபஸ்வினி தெரிவிப்பாள்'' என்று சற்று கண்டித்தே பேசினார்.

பிருத்விராஜன் தொண்டையைச் சற்று ஆத்திரமாகக் கனைத்துக்கொண்டான். அவனைச் சாந்தப்படுத்த, மேவார் ராணாவினால் இளவரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சாருணீதேவியின் வாக்குக்குக் கட்டுப்பட இசைந்து வந்த ஸங்கனே பேசத்தொடங்கி, ''தம்பி! அரியணையில் அமருவதில் எனக்கு அடியோடு விருப்பமில்லை, ஆனால் அரச சம்பிரதாயமிருக்கிறது. இவற்றை நான் எப்படிக் காற்றில் பறக்கவிட முடியும்? இப்பொழுது என்ன முழுகிப் போய்விட்டது? நீதான் அரியணையில் அமருவாய் என்று தபஸ்வினி குறிசொல்லிவிட்டால் நான் நாளையே தந்தையிடம் சொல்லி உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டிவிடுகிறேன்'' என்றான்.

ஸங்கனுடைய சொற்கள் சூரஜ்மல்லின் காதில் தேனைப் பொழிந்தன. இத்தகைய மேன்மைச் சிந்தனைகள் பொருந்தியவன் மேவார் சிங்காதனத்தில் அமருவதா அல்லது மூர்க்கனும் தன் வாள் பலத்தை மட்டும் நம்பியிருப்பவனுமான பிருத்விராஜன் அமருவதா என்று எண்ணிப்பார்த்து, 'சந்தேகமேயில்லை. அரியணையில் ஸங்கன்தான் அமருவான்' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு, லேசாகச் சிரிக்கவும் செய்தார்.

இயற்கையாகவே மூர்க்கனான பிருத்விராஜன் அந்தச் சிரிப்பால் ருத்திராகாரமான கோபத்தையடைந்து, ''எதற்குச் சிரிக்கிறீர்கள், மாமா?'' என்று இரைந்தான்.

''உங்கள் சம்பாஷணையை எண்ணிச் சிரித்தேன்'' என்றார் சூரஜ்மல்.

''அதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?'' மீண்டும் இடியென எழுந்தது பிருத்விராஜன் கேள்வி.

''நிரம்ப இருக்கிறது'' என்று மீண்டும் இகழ்ச்சியுடன் பதில் சொன்னார் சூரஜ்மல்.

''உதாரணமாக...''

''உன் ஆத்திரப் பேச்சுக்கும் ஸங்கனின் அமைதிச் சொற்களுக்கும் உள்ள வித்தியாசம்!''

''என்ன வித்தியாசத்தைக் கண்டீர்?''

''பல வித்தியாசங்களைக் கண்டேன். ஒன்றில் நிதானம்; மற்றொன்றில் மூர்க்கத்தனம். ஒன்றில் பொருள் செறிவு; இன்னொன்றில் மடமைச் செறிவு.''

''மடமையா! யாருக்கு மடமை என்பதைப் பார்ப்போமா?'' என்று வாளை உருவிய பிருத்விராஜனை, ''பிருத்வீ'' என்று அதிகாரம் தோய்ந்த ஸங்கனின் குரல் சற்றுத் தேக்கியது. ஆனால் அடுத்த விநாடி ஸங்கனையும் நோக்கிச் சீறிய பிருத்விராஜன், ''இன்னொருமுறை மாமாவுக்குப் பரிந்து பேசினால் நீ என் சகோதரன் என்பதையும் மறந்துவிடுவேன்'' என்று கூவினான்.

அத்தனை ஆத்திரத்துக்கும் சிறிதும் அசையாத ஸங்கன், ''அனாவசியக் கூச்சல் ஆத்திரத்தின் அறிகுறி. அத்தகைய கூச்சலில் ஈடுபடுவது அரச பரம்பரையினரின் பண்பாட்டுக்கு முரணானது. இதோ ஆலயம் வந்துவிட்டது. நிதானப்படுத்திக்கொள். மன்னன் முடி யாருக்கு என்பதை இன்னும் சில விநாடிகளில் உணர்ந்து கொள்ளப் போகிறோம்.



அதற்குள் எதற்காக ஆத்திரம்?'' என்று சமாதானம் சொல்லவே, அதற்குமேல் உள்ளே குமுறினாலும் மேலுக்கு ஏதும் பேசாத பிருத்விராஜன் மௌனமாகக் குதிரையை நடத்தினான்.

அவர்கள் ஆலயத்தை அடைந்தபோது மாலை நன்றாக ஏறிவிட்டதால், கதிரவன் மஞ்சள் நிறத்தை இழந்து, சிவந்த நிறம் பெற்றுக் குருதிக் கதிர்களைச் சாருணீதேவியின் ஆலயத்தின் மீது வீசியதால், எங்கும் ரத்த வெள்ளம் பாய்வதுபோல் தோன்றியது. அந்த ரத்தச் சிவப்பைப் பார்த்த சூரஜ்மல், தன் சகோதரி மைந்தர்களை நோக்கி, ''இந்த ரத்தச் சிவப்பைவிட தேவியின் நாவும் கண்களும் பன்மடங்கு அதிகச் சிவப்பாயிருக்கும்'' என்று கூறினார். மாமன் சொன்னதை ஆமோதிக்கும் முறையில் ஸங்கன் தலையை அசைத்தான். சிறுவனான ஜெய்மல் வெறித்துப் பார்த்தான். பிருத்விராஜன் மட்டும் ஒருமுறை உறுமினான். ''இயற்கையழகை ரசிக்க நாம் இங்கு வரவில்லை. நடங்கள் உள்ளே'' என்று சற்றுக் கண்டித்தும் கூறினான்.

ஆலயத்துக்குள் புக இருந்த சூரஜ்மல், இதைக் கேட்டதும் சட்டென்று நின்று திரும்பி, அந்த மூன்று ராஜபுத்திரர்களையும் நோக்கி, ''இது தேவியின் ஆலயம்; இங்கு அரசனும், ஆண்டியும் ஒன்று. தேவிக்கு அடுத்தபடி இங்கு வணக்கத்துக்குரியவர் தேவியின் இதயமறிந்து குறி சொல்லும் தபஸ்வினி. தேவியின் சந்நிதியில் பூசலுக்கோ வேறு ஆர்ப்பாட்டங்களுக்கோ இடமில்லை; நினைப்பிருக்கட்டும்'' என்று எச்சரித்துத் திரும்பி ஆலயத்துக்குள் புகுந்தார். மூன்று ராஜகுமாரர்களும் பதிலேதும் சொல்லாமல் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

ஆலயம் அப்படியொன்றும் பெரியதல்லவென்றாலும் அதன் அமைப்பு சற்று பயத்தை ஊட்டும் வண்ணம் இருந்தது. மலைக்கற்கள் அதிகமாகச் செதுக்கப்படாமல் குகைமாதிரி குடையப்பட்டிருந்ததாலும், குடையப்பட்ட குடவரைக் கூரையில் சக்தியின் பெரும் நிலைகள் செதுக்கப்பட்டிருந்ததாலும், ஆலயத்தின் உட்பகுதி கிலியைக் கிளப்பும் சூழ்நிலையைப் பெற்றிருந்தது. கோயிலின் உட்புறத்தில் காலை வைத்ததும் எதிரே தெரிந்த சாருணீ தேவியின் துர்க்கா சொரூபமும், சற்றுத் தொங்கிக்கொண்டிருந்த சிவந்த நாக்கும், செப்புத்தீட்டப் பட்டதால் அக்கினியைக் கக்குவனபோல் தெரிந்த கண்களும் பார்ப்பவர்களுக்குக் குலைநடுக்கமெடுக்கச் செய்தன. எதற்கும் அஞ்சாத பிருத்விராஜன் இதயத்தில் கூட அந்தச் சூழ்நிலை சற்று பயத்தை உண்டாக்கிய தானாலும், அதை ஒரு நொடியில் துடைத்துக்கொண்ட அந்த அரசகுமாரன், எதிரேயிருந்த தேவியின் சந்நிதியைத் தைரியத்துடன் ஏறெடுத்து நோக்கினான். தேவியின் காலடியில் தூய வெள்ளை வஸ்திரத்துடன் ஜபமாலையைக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் தபஸ்வினி. அவள் முகத்தில் சாந்தி நிலவி நிற்பதையும், தேவியின் கருணை வழிந்து கிடப்பதையும், அவற்றில் ஏதோ ஒரு புத்தொளி சதா விளையாடுவதையும் கண்ட லங்கன், தபஸ்வினிக்குத் தலைதாழ்த்தி வணங்கி சாருணீ தேவியின் பாதகமலங்களிலிருந்த மஞ்சள் பொடிகளை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான். அண்ணனின் அதிகப்படி பக்தியைக் கண்டு வெறுப்படைந்த பிருத்விராஜன், ராஜ தோரணையில் தேவிக்கும் தபஸ்வினிக்கும் தலை வணங்கி, தேவிக்கு அருகாமையிலிருந்த படியொன்றில் உட்கார்ந்



தான். அவனுக்குப் பின்னாலிருந்த பெரும் பாறையில் சூரஜ்மல்லும் சிறுவனான ஜெய்மல்லும் அமர்ந்தார்கள். தபஸ்வினிக்குச் சற்றுத் தள்ளி ஒரு புலித்தோல் கிடந்தது. தபஸ்வினியை மறுமுறை வணங்கிய லங்கன் அந்தப் புலித்தோல் மீது அமர்ந்தான்.

அவர்கள் அமருமுன்பாகவே தியானத்திலிறங்கி விட்ட தபஸ்வினி, அவர்கள் உட்கார்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம் தன் கண்களை மெல்லத் திறந்தாள். அவள் தியானத்திற்குப் பிறகு கண் திறந்ததைக் கண்ட சூரஜ்மல், குறி கேட்கும் சமயம் வந்துவிட்டதை உணர்ந்து, ''தபஸ்வினி!'' என்று விளித்த வண்ணம் கைகளைக் கூப்பிக்கொண்டு எழுந்தார்.

எழுந்திருக்க வேண்டாம் என்பதைக் குறிப்பாலுணர்த்திய தபஸ்வினி, சிறிது சிந்தித்துவிட்டுத் தேவியை ஒருமுறை நோக்கினாள். பிறகு எதிரேயிருந்த நால்வரையும் நோக்கி, ''நீங்கள் வந்திருக்கும் காரியம் தெரியும்'' என்று கூறிப் புன்முறுவல் செய்தாள்.

''தெரிந்தால் சொல்வதுதானே!'' என்று முரட்டுத்தனமாகக் கேட்டான் பிருத்விராஜன்.

தபஸ்வினியின் சாந்தி விழிகள் திடீரென்று துர்க்கையின் உக்கிரத்தைப் பெற்றன. ''சொல்வது நானல்ல, அரசகுமாரனே! சொல்வது தேவி! என் வாயால் பேசுகிறாள். நினைப்பிருக்கட்டும்'' என்று கடுஞ்சொற்களை உதிர்த்த தபஸ்வினி, மீண்டும் கண்களை மூடித் தியானத்தில் இறங்கினாள். விநாடிகள் ஏற ஏற அவள் முகம் பெரும் பொலிவு பெற்றது. அத்துடன் ரத்தமும் அந்த முகத்தில் குபீரென்று பாய்ந்ததால் முகமே தேவியின் நிறம்போல்

பிரகாசித்தது. மெள்ள மெள்ள அவள் வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன! மேவாரை ரத்த வெள்ளத்தில் ஆழ்த்த உதிர்ந்த வார்த்தைகள் அவை. மேவார் அரியணையில் அமர அரச குமாரர்களே இல்லாமல் அற்றுப்போகும் படியான பயங்கரச் சொற்கள் அவை. அந்தச் சொற்கள் அந்த விநாடியிலேயே சாருணீதேவியின் முன்னிலையிலேயே பெரும் நரபலிகளைக் கொடுக்கும் உக்கிரத்துடன் எழுந்து மேவார் ராஜவம்சத்தின் மீது விதி வீசிய அஸ்திரங்களென விழுந்தன.

## அத்தியாயம்-2

# உத்தரவு

மகா துர்க்கையான சாருணீ தேவியின் உக்கிரச் சிலையின் திருவடிகளின் பக்கத்திலமர்ந்து கண்களை மூடிய தபஸ்வினியின் முகம் சில விநாடிகளில் சிவந்து ஒளிப் பிழம்பாகிவிட்டதைக் கவனித்த சூரஜ்மல், தேவியின் சக்தி தபஸ்வினியின் உடலில் இறங்க ஆரம்பித்து விட்டதென்பதை ஊகித்துக் கொண்டதால், மிகுந்த பயபக்தியுடன் அவள் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார். சிவந்த அவள் முகத்தையும், லேசாக நடுங்கிய உதடுகளையும் கண்ட ராணாவின் மூன்றாவது குமாரனான ஜெய்மல், பயத்தால் சற்று இப்படியும் அப்படியும் அசைந்தான். பயமின்றிப் பக்தியுடன் உட்கார்ந்திருந்தான் ஸங்கன். பயமோ பக்தியோயின்றி எதையும் லட்சியம் செய்யாமல் உட்கார்ந்திருந்த பிருத்விராஜன், மற்ற மூவர் மீதும் ஒருமுறை தன் கண்களை ஓட்டி, 'சே! என்ன கோழைகள்!'



என்று மனத்துக்குள் கடிந்துகொண்டான். அப்படிக் கடிந்து கொண்ட பிருத்விராஜன் இரும்பு மனத்தையும் உடைக்க வல்ல ஒரு பெருமூச்சும் 'ஹூம்' காரமும் தபஸ்வினியிடமிருந்து எழுந்து அந்த ஆலயத்தை ஊடுருவிச் சென்றது. சாருணீ தேவியின் திருவாயிலிருந்து பிரணவ சப்தம்போல் கிளம்பி, ஆலயத்தின் பாறைகளில் மோதிப் பயங்கரமாக எதிரொலி செய்த அந்த ஹூங்காரம், அவநம்பிக்கையில் இருளடைந்த இதயத்தையுடைய பிருத்விராஜனையும் ஓர் உலுக்கு உலுக்கவே, அவனும் தபஸ்வினியின் முகத்தைக் கூர்ந்து கவனிக்கலானான்.

தபஸ்வினியின் தேகம் ஒருமுறை நடுங்கியது. பிறகு அடங்கி உதடுகள் மட்டும் லேசாக நடுங்கின. நடுங்கிய உதடுகள் மெள்ளத் திறந்து, "மேவார், தார்மிகர்களான அரசர்கள் ஆண்ட பூமி. அதை தர்மவிரோதிகள் ஆள முடியாது. உங்களில் எவன் தர்மவானோ அவன் ஆள்வான்" என்று வார்த்தைகளை உதிர்த்தன.

இதைக் கேட்டதும் தபஸ்வினியை நோக்கிக் கை குவித்த சூரஜ்மல், "ராணாவின் இந்தச் செல்வர்கள் மூவரும் தர்மம் தவறாதவர்கள்; இவர்களில் அரியணையில் அமரத் தகுந்தவர் யார்?" என்று பணிவுடன் வினவினார்.

ஒரு விநாடி தாமதித்த பிறகு தபஸ்வினியின் உதடுகள் மீண்டும் திறந்து, "தர்மம் இருக்கிற இடத்தில் தெய்வ பக்தியிருக்கும், பெரியவர்களிடத்தில் பணிவு இருக்கும்" என்று சொற்களை உதிர்த்தன.

இதைக் கேட்ட பிறகு பிருத்விராஜனின் உள்ளம் மெள்ள மெள்ள எரிமலையாகத் தொடங்கியது. பேசுவது தெய்வமல்லவென்றும், தபஸ்வினியே வேண்டுமென்று

கண்ணை மூடிக்கொண்டு தன்னை இகழ்ந்து பேசுகிறாளென்றும் நினைத்ததால், அவன் மனம் பேயென எழுந்ததன்றிக் கையும் வாளின்மீது மெள்ளச் சென்று அமர்ந்தது.

''ராணாவின் செல்வர் மூவரில் தர்மமும் தெய்வ பக்தியும் யாரிடமிருக்கிறது?'' என்று மூன்றாவது கேள்வியை வீசினார் சூரஜ்மல்.

இம்முறை தபஸ்வினி மூலமாக வெளிவந்த சாருணீ தேவியின் குரல் திடமாகப் பேசியது. ''தர்ம மார்க்கத்தை இயற்கையின் சக்திகள் சுட்டிக் காட்டுகின்றன; தர்மவான்களுடைய பிற்காலத்திற்கும் அவை சான்றாக நிற்கின்றன. மஞ்சள் வெயில் காய்ந்த நேரத்தில் நீங்கள் ஆலயத்தை நோக்கி வந்தீர்கள். ஆகவே, மஞ்சளுக்கும் எவனுக்கும் சம்பந்தமுண்டோ அவனே, மேவாரை அரசாளுவான் என என் தபஸ்வினி உங்களைக் கண்டதும் ஊகித்தாள். ஆனால், அவள் ஊகிக்காத சகுனங்களும் நிகழ்ந்திருக்கின்றன. நீங்கள் ஆலயத்துக்குள் நுழையும்போது சூரியன் ரத்தப் பிழம்பாகி விட்டான். ஆகவே, மேவாரின் அரியணை யாருக்குக் கிடைத்தாலும் அதற்கு முன்பு அந்த அரியணை சம்பந்தமாக ரத்தம் சிந்தத்தான் செய்யும். ஆனால், மஞ்சளின் சம்பந்தமுள்ளவன் இறுதியில் வெற்றியடைவான். அவனே மேவாரை ஆள்வான். மேவாரும் அவனால் சிறப்புறும்'' என்று தேவி கூறினாள் தபஸ்வினியின் மூலமாக.

''புரியவில்லை தேவி. விளக்கவேண்டும்'' என்று கேட்டார் சூரஜ்மல்.

''என் தபஸ்வினி விளக்குவாள்'' என்றது அந்த அமானுஷ்யக் குரல். அத்துடன் தபஸ்வினியின் தலை தொங்கியது. சூரஜ்மல் மெள்ள எழுந்தார். வழக்கம் போல்



தேவி சந்நிதானத்திலிருந்த மந்திர ஜலத்தை எடுத்துத் தபஸ்வினியின் முகத்திலடித்தார். தபஸ்வினி கண்களை அகல விழித்து மூவரையும் நோக்கி, பிருத்விராஜன் முகத்தில் உக்கிராகாரமான கோபம் தாண்டவமாடுவதையும், அவன் கையும் வாளின் மீது அமர்ந்திருப்பதையும், அவன் உட்கார்ந்த நிலையைவிட்டு ஒரு காலைப் படியில் ஊன்றிய வண்ணம் நின்றிருப்பதையும் கண்டு, ''அரசகுமாரன் கோபத்துக்கு என்ன காரணம்?'' என்று கேட்கவும் செய்தாள்.

''சிறுபிள்ளை; எதிலும் ஆத்திரமுடையவன். தேவியின் வாக்கைத் தவறாகப் பொருள் கொண்டிருப்பான்'' என்று சமாதானம் சொன்னார் சூரஜ்மல்.

''தவறாகப் பொருள் கொள்ளவில்லை மாமா. நீ இங்கு எங்களை அழைத்து வந்ததன் சூது எனக்குத் தெரிகிறது. தேவியின் பெயரால் நீங்களும் இந்த தபஸ்வினியும் சேர்ந்துகொண்டு நடத்தும் நாடகம் புரியவில்லை என்று நினைக்க வேண்டாம்'' என்றான் பிருத்விராஜன், குரல் இடியென முழங்க.

''ஆம் ஆம், இதில் சூது இருக்கிறது'' என்று கூறினான் சிறுவனான ஜெய்மல்லும்.

தபஸ்வினி ஏதும் புரியாததால் விழித்தாள். ஆகவே சூரஜ்மல்லை நோக்கி, ''தேவி என்ன சொன்னாள்?'' என்று வினவினாள்.

''உனக்குத் தெரியாது என்பது பாசாங்கு!'' என்று கூவினான் பிருத்விராஜன்.

''இது தேவியின் ஆலயம். உன் ஆத்திரத்தைக் காட்டாதே'' என்று கோபத்துடன் தபஸ்வினி பேசிவிட்டு

மீண்டும் சூரஜ்மல்லை நோக்கி, "தேவி என்ன சொன்னாள்?" என்று கேட்டான்.

சூரஜ்மல் ஏதோ மனப்பாடம் செய்து வைத்தவர் போல் அப்படியே வார்த்தைகளைக் கொட்டவே தபஸ்வினியின் விழிகள், எதற்கும் அசையாமலும் புலித் தோலை விட்டு நகராமலும் நிதானத்தை இம்மியளவும் இழக்காமலும் உட்கார்ந்திருந்த ஸங்கனை நோக்கின. அடுத்த விநாடி நிர்ப்பயத்துடன் திட்டமாகத் தனது கையை அவனை நோக்கி நீட்டி, "அதோ அவன்தான் மேவார் அரியணையில் அமருவான். கோயிலில் இத்தனை இடமிருக்க, புலித்தோலில் உட்கார்ந்தவன் அவன்தான். புலித்தோல், மான்தோல், ஆட்டுத்தோல் இவை மூன்றில் அரசர்கள் உட்காருவது சம்பிரதாயம். இது முதல்சகுனம், இரண்டாவது, புலித்தோலின் கறுப்புப் புள்ளிகளுக்கிடை மஞ்சள் திட்டுக்கள் இருக்கின்றன. தவிர அவன் நெற்றியிலும் தேவியின் பாதகமலத்தின் மஞ்சள் திலகமிருக்கிறது. தேவி சொன்ன மஞ்சள் சம்பந்தம் இதுதான். இது இரண்டாவது சகுனம்..." என்று தபஸ்வினி சொல்லிக் கொண்டு போகையிலேயே, இடி இடியென்று எழுந்த பிருத்விராஜனின் கோப நகை, தேவியின் ஆலயத்தை கிடுகிடுக்கச் செய்தது. "மூன்றாவது சகுனத்தை விளக்க நீ தேவையில்லை, பூஜாரிணி! நான் விளக்குகிறேன். மேவார் அரியணையில் அந்தத் தர்மத்தின் சொரூபம் அமருமுன்பு ரத்தம் சிந்தப்படும் என்று தேவி சொன்னாள். சூது நிறைந்த உங்கள் நாடகத்தின் மூன்றாம் பகுதியை நான் நிறைவேற்றி வைக்கிறேன்" என்று சொல்லிக் கட்டடம் அதிரும்படியாக இரைந்த பிருத்விராஜன், கண்ணிமைக்கும் நேரத்தில் கத்தியை உருவி, உட்கார்ந்திருந்த ஸங்கன் தோளில் ஒரு



வெட்டு வெட்டினான். அந்த வெட்டைத் தொடர்ந்து அடுத்த மூன்று வெட்டுகளும் ஸங்கனின் மற்ற தோளிலும் முதுகிலும் விழுந்தனவென்றாலும் ஸங்கன் வாளை மட்டும் உருவவில்லை. குருதி, தேவியின் சந்நிதானத்தில் பாய எழுந்து நின்றான்.

"நீ என்ன பேடியா! க்ஷத்திரியனில்லையா! எடு வாளை! தேவி தேவையில்லை. நமது வாள்கள் தீர்மானிக்கட்டும், யார் அரசர் என்பதை?" என்று கூவிய பிருத்விராஜன் மீண்டும் வாளை ஓங்கினான். அப்பொழுதும் ஸங்கன் வாளை உருவவில்லை. பிருத்விராஜ் வாளை சூரஜ்மல்லின் வாள் தடுத்தது. அடுத்த விநாடி இருவாள்களும் பலமுறை மோதி ஆலயமெங்கும் பயங்கர ஒலிகளைக் கிளப்பின. அந்த ஒலிகளோடு ஒலியாக, "வேண்டாம், இது தேவியின் ஆலயம். இங்கு போருக்கும் பூசலுக்கும் இடமில்லை, இடமில்லை" என்று தபஸ்வினி இட்ட கூச்சல் ஆலயத்தின் பாறைகளில் எதிரொலி செய்ததே யொழிய சண்டை மும்முரமாக நடந்து கொண்டு தானிருந்தது. வாட்போரில் சிறந்த பிருத்விராஜனும், அவனுக்கு வாளைச் சுழற்றச் சொல்லி வைத்த சூரஜ்மல்லும் யாருக்கு வன்மை அதிகம் என்று நிர்ணயிக்க முடியா வண்ணம் சண்டையிட்டார்கள். பிருத்விராஜனுக்கு எத்தத் தீமையும் விளைவிக்க இஷ்டப்படாத சூரஜ்மல் எத்தனை ஜாக்கிரதையாக வாளைச் சுழற்றியும், பிருத்விராஜனின் மூர்க்கத்தனத்தால் இருவர் உடல்களிலும் காயங்கள் பல பட்டுக் குருதி ஆறாகப் பெருகத் தொடங்கியது. ஆழமான காயங்கள் மாமன் உடலிலும் மருமகன் உடலிலும் பட்டதாலும், போரின் உக்கிரத்தை இருவரும் சகிக்க முடியாததாலும், ரத்த சேதம் அளவுக்கு மீறி ஏற்பட்டதாலும்

அப்படி விழுந்த இருவரையும் அணுகிய லங்கன் தபஸ்வினியின் உதவி கொண்டு தன் ஆடைகளைக் கிழித்து அவர்கள் ரத்தத்தைத் துடைத்து, கட்டும் போட்டுவிட்டு ஜெய்மல்லைத் தேடினான். கோழையான ஜெய்மல் ஆலயத்தின் எந்தப் பகுதியிலும் காணாது போகவே, "தபஸ்வினி! நான் போய் ஜெய்மல்லை அனுப்புகிறேன். நீங்கள் இவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, வெளியேற முயன்ற லங்கனை, "நில் லங்கா!" என்று தடுத்தாள் தபஸ்வினி. அப்பொழுதுதான் முதன் முதலாக அவன் பெயரைச் சொன்னாள் அவள்.

"ஏன், தாயே? நான் போய் இவர்களை எடுத்துச் செல்ல வீரர்களை அனுப்புகிறேன். அதுவரை என் தம்பி ஜெய்மல் இவர்களுடனிருக்கட்டும்" என்றான் லங்கன்.

"இவர்களை அனுப்ப நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால், ஜெய்மல்லைத் தேடாதே" என்றாள் தபஸ்வினி.

"ஏன்?" விஷயம் ஏதும் புரியாமல் குழப்பத்துடன் கேட்டான் லங்கன்.

"உன்னைத் தீர்த்துக்கட்ட ஆளை அழைத்துவர ஜெய்மல் போயிருக்கிறான். நீ பெரிய வீரன்தான்; இருப்பினும் பலருக்கு முன்பு ஒருவன் என்ன செய்ய முடியும்? சில நாட்களுக்கு மேவாரை விட்டுப் போய்விடு. இல்லாவிடில் ரத்தத்தால் சிம்மாதனத்தைச் சம்பாதிக்க விரும்பும் இந்தப் பிருத்விராஜன் உன்னைக் கொன்று விடுவான்" என்றாள் தபஸ்வினி.

"சாவுக்கு நான் அஞ்சுகிறேனென்று நினைக்கிறீர்களா?" என்று லங்கன் கேட்டான்.

"இல்லை."



"பின் எதற்கு நான் பயப்பட வேண்டும்?"

"விதிக்கு. தேவியின் ஆணைக்கு."

"விதிக்கு நான் அஞ்சவில்லை. ஆனால், தேவியின் ஆணைக்கு அஞ்சுகிறேன்."

"நீ மேவார் அரியணையில் அமர்ந்து மேவாருக்கு மங்களத்தைச் செய்யவேண்டும் என்பது தேவியின் ஆணை. உன் நெற்றியிலிருக்கும் அவள் மஞ்சள் காப்பு அதற்கு அத்தாட்சி. எப்பொழுதும் மஞ்சள்தான் உன் கவசம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் மஞ்சள் நிறத்தைப் புறக்கணிக்காதே. அது உன் பாதுகாப்பு என்பதை மறவாதே. உன்னால் மேவார் பெரும் புகழடையும். ஆனால், இது நீ மறைந்துறைய வேண்டிய காலம். மறைந்திரு."

"மறைவது வீரருக்கு அழகா?"

"அதைவிடப் பதுங்குவது புலிக்கு அழகா என்று கேள். அடங்க வேண்டிய சமயத்தில் அடங்கி, எழ வேண்டிய சமயத்தில் எழுபவனே வீரன். ஏகசக்ரபுரத்தில் பிராம்மண வேடத்திலும், விராடத்தில் பல வேடங்களிலும் உறைந்து வாழ்ந்த பாண்டவர்கள் கோழைகளா? போ மகனே, போ; மேவார் எல்லையை விட்டுப் போய்விடு. அது தற்சமயம் குறுகலான எல்லைதான். பின்னால் விஸ்தாரப்படும்."

இதைக் கேட்ட லங்கன் சொன்னான்: "தபஸ்வினி! போகிறேன். ஆனால் பயந்தல்ல. எனக்குப் பதில், அரசு மீது ஆசை வைத்திருக்கும் என் சகோதரன் அரசை ஆளட்டும் என்ற எண்ணத்தால் போகிறேன்" என்று கூறி விட்டுத் திரும்பிய லங்கன் இடக்கண்ணில் பெரும் அம்பொன்று பாய்ந்தது. தபஸ்வினி வாயிலை நோக்கினாள். அம்பை

எய்த ஜெய்மல் குதிரைமீதேறி மலைச்சரிவில் ஓடிக் கொண்டிருந்தான்.

தபஸ்வினி ஸங்களை நோக்கினாள். அம்பு கண்ணில் பாய்ந்த அந்த நேரத்திலும் ஸங்கன் நிதானத்தை இழக்காததைக் கண்ட தபஸ்வினி, சரித்திரத்தின் மகா புருஷர்களில் ஒருவன் முன்பு தான் நிற்பதைக் கண்டு கொண்டாள். அதனால் ஏற்பட்ட மரியாதையின் காரணமாக ஸங்களை உட்காரச் சொல்லி, அவன் தலையைத் தன் மடியில் சாய்த்துக்கொண்டு, அம்பை மெள்ளப் பிடுங்கி விட்டு, தலையைப் படியில் சாய்த்துவிட்டு, தேவியின் மாலையிலிருந்த மூலிகை இலைகள் சிலவற்றை தேவியின் ஆலய விளக்கு எண்ணெயில் தோய்த்துத் தேவியின் விளக்கொளியிலேயே வாட்டி, ஸங்கன் கண்ணில் வைத்துக் கட்டி, சில விநாடிகள ஏதோ ஜபித்தாள்.

பிறகு சொன்னாள், "இனிக் காத்திருக்க நேரமில்லை மகனே; புறப்படு. உன் தம்பி மற்றும் சில வீரர்களை அழைத்து வருமுன் புறப்படு" என்று.

"எங்கு போவதற்குப் புறப்பட வேண்டும், தாயே? கேவலம், அரகக்காகச் சகோதரரை எதிர்க்க இஷ்டமில்லை எனக்கு" என்றான் ஸங்கன், வருத்தம் தோய்ந்த குரலில்.

"நமது இஷ்டப்படி உலகத்தில் எதுவும் நடப்ப தில்லை குழந்தாய். தவிர அரச குடும்பத்தில் பிறந்த உனக்குச் சாதாரண மக்களுக்கில்லாத கடமைகள் உண்டு. ஆகவே, போ, தப்பிவிடு" என்றாள் தபஸ்வினி.

"எங்கு போகட்டும்?" என்று கேட்டான் ஸங்கன்.

தபஸ்வினி சற்று நேரம் கண்களை மூடி ஏதோ யோசித்தாள். பிறகு, கண்களைத் திறந்து, தேவியை நீண்ட



நேரம் நோக்கினாள். "தேவி, மஞ்சளை நாடிச் செல்ல உத்தரவிடுகிறாள்" என்றாள் இறுதியாக.

"புரியவில்லையே, தாயே" என்றான் ஸங்கன்.

தபஸ்வினியின் சொற்கள் ஆவேசத்துடன் வெளி வந்தன. தேவியே மீண்டும் பேசுவது போல் தோன்றியது ஸங்கனுக்கு. தபஸ்வினி அவனைத் திரும்பிப் பாராமல், தேவியின் விழிகளில் தன் விழிகளை நாட்டிக் கொண்டு, "ஸங்கா! போ! மஞ்சள் ஆற்றங்கரைக்குப் போ" என்று மந்திரம் சொல்வது போல் சொற்களை உதிர்த்தாள்.

## அத்தியாயம்-3

# ஆண்டவன் தீர்த்தம்

"மஞ்சள் ஆற்றங்கரைக்குப் போ!" என்று மகா துர்க்கையான சாருணீ தேவியே வாய் திறந்து பேசியது போல், உணர்ச்சி வேகத்துடன் தபஸ்வினியின் வாயிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கேட்டுங்கூட, ஸங்கன் அந்த ஆலயத்தை விட்டு நகர மனமில்லாமல், வெட்டுக் காயங்களுடன் கிடந்த தம்பி பிருத்விராஜனையும் மாமன் சூரஜ்மல்லனையும் கட்டுப் போடாத தன் ஒற்றைக் கண்ணால் பார்த்துக் கொண்டு நின்றான், தேவியின் கண்களோடு தன் கண்களை இணைத்திருந்த தபஸ்வினி சில விநாடிகள் ஸங்களைத் திரும்பிப் பார்க்கவில்லை யென்றாலும், திரும்பிப் பார்த்ததும் எல்லையற்ற வியப்பை அடைந்து, "ஸங்கா! நீ இன்னும் புறப்படவில்லை?" என்று கேட்டாள்.

''இல்லை, தாயே'' என்றான் ஸங்கன், தபஸ்வினியை நோக்கி.

''ஒற்றைக் கண்ணில் அம்பு பாய்ந்து கட்டப் பட்டிருந்த அந்தச் சமயத்திலும் நிதானத்தை இழக்காமல் தம்பியையும் மாமனையும் அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டு வெளியே செல்லாமல் நின்ற அந்த அரச குமாரனை நோக்கிய தபஸ்வினி, ''ஏன் ஸங்கா? ஏன் தயங்குகிறாய்'' என்று வினவினாள்.

''தம்பிக்கும் மாமனுக்கும் காயங்கள் பலமாகப் பட்டிருக்கின்றன, தாயே. அவர்களை நிராதரவாய் எப்படி விட்டுச் செல்வேன்?'' என்று கேட்டான் ஸங்கன்.

''ஸங்கா! தேவியின் ஸந்நிதியில் நிராதரவு என்ப தில்லை. உலகத்தில் தேவியைவிட வேறு ஆதரவு ஏது?'' என்று கேட்டாள் தபஸ்வினி.

''தாயே! தவறாக நினைக்க வேண்டாம், மகா சக்திடத்திலோ தங்களிடத்திலோ அபசாரப்படும் நோக்கம் எனக்கில்லை. தேவியின் கருணையினால்தான் அவள் சந்நிதானத்தில் ரத்தக்களரி ஏற்பட்ட பின்புங்கூட இவ்விருவரும் உயிருடனிருக்கிறார்கள் என்பது என் கருத்து. ஆனால், இங்கிருந்து மேவார் தலைநகரம் நீண்ட தூரம் இருக்கிறதே. இந்தக் கோயிலைச் சாதாரணமாக மனிதர் அணுகுவதும் துர்லபமாயிற்றே. நீங்கள் எப்படி அரண்மனைக்குச் செய்தியனுப்ப முடியும் என்று தான் யோசிக்கிறேன்'' என்று பதில் சொன்னான் ஸங்கன்.

''மலையடிவாரத்திலிருந்து அரைக் காதத்தில் கிராமம் இருக்கிறது ஸங்கா. அங்கு சதுர்ப்புஜன் கோயிலுமிருக் கிறது. உனக்குத் தெரியாதா



''ஆம் தாயே! கோயிலிருக்கிறது. அங்கு நீங்கள் எப்படிச் செல்ல முடியும்?''

''ஏன் செல்ல முடியாது?''

''இந்த மலைச்சரிவில் குதிரைகளில் வருவதே எங்களுக்குக் கஷ்டமாயிருந்தது...''

''நீங்கள் ராஜவம்சத்துச் செல்வர்கள். வழவழத்த அரண்மனைத் தரையில் நடக்கும்போது பணிமக்கள் உங்கள் பாதங்களுக்குப் பட்டாடை விரிப்பார்கள். எனக்கு அந்தப் பழக்கமில்லையே. காயக் கிலேசமும், கல்லிலும் முள்ளிலும் நடப்பதும் என்னைப் போன்றவர்களுக்குச் சகஜந்தானே. எத்தனையோ முறை நான் சதுர்ப்புஜன் கோயிலிருக்கும் கிராமத்துக்குப் போயிருக்கிறேன்'' என்றாள் தபஸ்வினி.

தபஸ்வினி இத்தனை விளக்கமாகக் கூறியும் தம்பியையும் மாமனையும் அந்த நிலையில் விட்டுப்போக இஷ்டமில்லாத ஸங்கன் சிறிது நேரம் தயங்கினான். அவன் தயக்கத்தைத் தபஸ்வினியும் கவனித்தாளாகையால் மெள்ளப் புன்முறுவல் கொண்டு வினவினாள், ''இன்னும் சந்தேகம் தீரவில்லையா, ஸங்கன்?'' என்று.

''சந்தேகமேதுமில்லை, தாயே!'' என்று மென்று விழுங்கினான் ஸங்கன்.

''சந்தேகம் இருக்கிறது ஸங்கா! சகோதர பாசமும் உன்னை இழுக்கிறது. அந்தப்பாசம், இதோ கிடக்கும் இந்தப் பிருத்விராஜனுக்குமிருந்தால் மேவார், மேவாரை மட்டுமல்ல. இந்தப் பாரத நாட்டையே ஆளும். ஆனால் இந்த நாட்டில் சகோதரர் சண்டை புராண காலத்திலிருந்து

தொடர்ந்து வரும் ஒரு பெரிய சாபம். அதற்கு நாம் என்ன செய்வது?'' என்றாள் தபஸ்வினி, சற்று வாய் விட்டுச் சிரித்து.

லங்கன் ஒரு முறை தன் ஒரு கண்ணால் அவள் இதயத்தையே ஊடுருவி விடுபவன்போல் பார்த்துவிட்டுப் பிறகு தலையைக் குனிந்துகொண்டு, திடமற்ற குரலில், ''தாயே! நீங்கள் ஒரு வரம் தரவேண்டும்'' என்றான்.

வியப்பு சிறிதுமில்லாத முகத்துடன் லங்கனைப் பார்த்தாள் தபஸ்வினி. அவன் உள்ளத்தில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்களை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டதால் அனுதபாபமும் அந்த முகத்தில் உதயமாயிற்று. ''என்ன வரம், லங்கா?'' என்று வினவினாள் தபஸ்வினி அனுதாபத்தைக் குரலிலும் காட்டி.

''சதுர்ப்புஜன் கோயிலுக்குச் செல்ல அனுமதி வேண்டும்'' என்றான் லங்கன்.

''அங்கு உனக்கு ஆபத்து காத்திருக்கிறதே!'' என்று வருத்தத்துடன் தெரிவித்தாள் தபஸ்வினி.

''ஆபத்தா! எனக்கா!'' என்று வியப்புடன் வினவினான் லங்கன்.

''ஆம், லங்கா!''

''இன்னும் என்ன ஆபத்து எனக்கு ஏற்படக்கூடும்?''

''ஆபத்தின் அஸ்திவாரத்தை நினைத்துப் பார்.''

''ஆபத்தின் அஸ்திவாரமா?''

''ஆம், லங்கா! மண்ணும் பொன்னுந்தான் ஆபத்தின் அஸ்திவாரங்கள். மண்ணும் பொன்னும் பலர் ஆசையைத் தூண்டுகின்றன. அந்த மண்ணும் பொன்னும் ஒருவனுக்கு



உரியதாயிருக்கும்போது மற்றவர்கள் அவன் மீது குரோதம் கொள்ளுகிறார்கள். குரோதம் பஞ்சமா பாதகங்களை விளைவிக்கிறது. ஆகையால், உன்னிடம் குரோதம் அனைவருக்கும் ஏற்படுவது சகஜமல்லவா? உன் சகோதரர்களின் ரத்தப் பாசமே, ஆசையால் அறுந்திருப்பதை நீ பார்க்கவில்லையா?''

தபஸ்வினியின் சொற்கள் நூற்றுக்கு நூறு உண்மையென்பதை லங்கன் உணர்ந்திருந்தாலும் மீண்டும் கேட்டான், ''சகோதரர்களால் ஆபத்து நேரலாம். ஆனால் ஒருவன் இதோ காயமடைந்து கிடக்கிறான், இன்னொருவன் அம்பெய்து ஓடிவிட்டான். இனி சதுர்ப்புஜன் கோயிலுள்ள கிராமத்தில் என்னை எதிர்ப்பவர் யாரிருக்கிறார்கள்?'' என்று.

தபஸ்வினி மீண்டும் புன்னகை புரிந்து, மூர்ச்சையாக இருந்த பிருத்விராஜனை நோக்கினாள். ''லங்கா, இந்த ராஜகுமாரன் கோபிஷ்டன், ஆனால் வீரன்'' என்று, புதிதாக ஓர் உண்மையைக் கண்டுபிடித்தது போல் சொன்னாள்.

இதை எதற்காகச் சொல்கிறாள் தபஸ்வினி என்பதை அறியாத லங்கன், ''ஆம், தாயே! பிருத்விராஜன் மகா வீரன்'' என்று ஆமோதித்தான்.

''இவன் நேருக்கு நேர் போர் செய்ய வல்லவன்'' என்றாள் தபஸ்வினி.

''ஆம், தாயே!'' என்று அதையும் ஆமோதித்தான் லங்கன்.

''ஆனால், சற்று முன்பு மறைந்திருந்து திருட்டுத்தனமாக உன் கண்ணில் அம்பெய்துவிட்டு ஓடினானே உன் தம்பி, அவன் வீரனல்ல லங்கா'' என்று உணர்த்தினாள் தபஸ்வினி.

''சிறுவன்'' என்று தாங்கிப் பேசினான் ஸங்கன்,

''ஆண்மையில் மட்டுமல்ல, புத்தியிலும் சிறுவன். மறைந்து அண்ணனைக் கொல்ல முயலும் வஞ்சகன். அவனை நம்புவதற்கில்லை. அவன் உன்னை ஆட்களைக் கொண்டு வளைக்கத் தவறமாட்டான். ஆகையால், எங்கும் தாமதிக்காதே, ஸங்கா! நேராக மஞ்சளாற்றங்கரைக்குப் போ, தேவியின் கட்டளைப்படி நட. வெகு சீக்கிரம் நீ மேவார் அரியணையில் அமருவாய். இவர்களைப்பற்றிக் கவலைப்படாதே. இவர்களை நான் அரண்மனையில் சேர்த்து விடுகிறேன்'' என்று வற்புறுத்திக் கூறினாள் தபஸ்வினி.

சதுர்ப்புஜன் கோயில் பகுதிக்குப் போவதற்கே தனக்கு உத்தரவு இல்லையென்பதை தபஸ்வினியின் வார்த்தைகளால் சந்தேகமறப் புரிந்து கொண்ட ஸங்கன் துக்கம் புரண்டோடிய உள்ளத்துடன் தபஸ்வினியிடம் விடைபெற்றுக் கொண்டு, சாருணிதேவியின் ஆலயத்தை விட்டு வெளியே வந்து, புரவிமீதேறிக்கொண்டு மலைச்சரிவின் பாதையில் இறங்கினான். பாதையில் இறங்கிய சமயத்திலும் ஸங்கனின் எண்ணங்கள் காயமுற்று ஆலயத்தில் கிடந்த தன் தம்பியையும் மாமனையும் வளைய வந்து கொண்டிருந்ததால் மலையடிவாரத்துக்கு வந்த பின்புகூட அவன் எண்ணங்களில் சிறிதும் மாறுதல் ஏற்படவில்லையாகையால், 'ஏன், சதுர்ப்புஜன் கோயிலுக்குப் போனால்தான் என்ன?' என்று நினைத்தான் ஸங்கன். அவன் ஒற்றைக்கண், மஞ்சளாற்றுக்குச் செல்ல வேண்டிய பாதையிலிருந்து சற்று விலகி, சாரத்திலிருந்த தோப்பு ஒன்றைக் கவனித்தது. 'அந்தத் தோப்பு தான் சாரத்துக்கு மேலிருக்கும் அதைப்பிடித்துத் தானே இருக்கிறது சதுர்ப்புஜன் கோயில்



அங்கு போய்க் கோயிலதிகாரிகளிடம் சொன்னாலே ஆளனுப்புவார்கள். நான் கிராமத்துக்குக்கூடப் போக வேண்டிய அவசியமில்லையே' என்று மீண்டும் மீண்டும் நினைத்த ஸங்கன், சாருணீ தேவியை ஒரு முறை மனத்தில் தியானித்து, ''மன்னிக்கவேண்டும், தாயே, மரணகாயத்திலிருக்கும் இருவருக்கும் உடனடியாக உதவியனுப்பாமல் என்னால் மஞ்சள் ஆற்றுக்குச் செல்ல முடியவில்லை'' என்று கூறிக்கொண்டு, புரவியைத் தோப்பின் பாதையை நோக்கித் திருப்பினான்.

நிர்மானுஷ்யமான பாலைவனப் பாதையில் சிறிது நேரமும் தோப்புப்பகுதியில் சிறிது நேரமும் பயணம் செய்த ஸங்கன், இருட்டு நன்றாக ஏறி மையென வையகத்தைக் கவிந்துகொண்ட சமயத்தில் சதுர்ப்புஜன் கோயிலை அடைந்தான். தோப்பின் தென்புற முகப்பிலிருந்த சதுர்ப்புஜன் கோயிலில் அப்பொழுது முதல் ஜாம பூஜை நடந்து கொண்டிருந்தது. ஊரைவிட்டுத் தள்ளிய தோப்பிலிருந்த காரணத்தால் கூட்டம் ஏதுமில்லாத அந்தக் கோயிலுக்குள் சென்ற ஸங்கன், அர்ச்சகர்களில் ஒருவர் சதுர்ப்புஜனுக்குப் பூஜை செய்து கொண்டிருப்பதையும் மற்றொருவர் கோயிலின் பெரு மணியைக் கையிலெடுத்து அடிக்கத் தொடங்கி விட்டதையும் கண்டு கர்ப்பக்கிரகத்தின் முகப்பிலேயே நின்று தலை வணங்கினான்.

ஏதும் பேசாமல் பின்புறத்தில் நின்று தலை வணங்கியதால் ஸங்கன் வந்திருப்பதை அறியாத அர்ச்சகர்கள் தங்கள் கடமையிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஸங்கனும் சதுர்ப்புஜனின் கடலினும் பெரிய கண்களின் கருணை வெள்ளத்தில் அமுந்தி, அந்த அழகிய மூர்த்தியையே பார்த்துக்கொண்டு நின்றான். விஷ்ணுவின் ஆயிர நாமங்

களையும் பக்தியுடன் சொல்லி அர்ச்சனை செய்து கொண்டிருந்த அர்ச்சகர் ''பயகிருத் பயநாசன:'' என்ற இடத்திற்கு வந்ததும் சிறிது புன்முறுவல் செய்த ஸங்கன், சதுர்ப்புஜனை மனத்தால் வணங்கி, ''பிரபு, 'பயகிருத் அதாவது பயத்தைத் தருபவனும் நீ பயநாசன: பயத்தை நாசம் செய்பவனும் நீ' என்று மந்திரம் சொல்லுகிறதே. என் விஷயத்தில் உன் கிருபை எப்படி? பயத்தைக் கொடுக்கிறாயா, பயத்தை நிவர்த்திக்கப் போகிறாயா? உன் ஆலயப்புறம் வந்தால் எனக்கு ஆபத்து உண்டு. பயம் உண்டு என்று தபஸ்வினி சொன்னாளே, அதை உண்மையாக்கப் போகிறாயா?'' என்று கேட்டான்.

நிரந்தரமாகச் செதுக்கப்பட்டிருந்த போதிலும் சதுர்ப்புஜன் விக்ரகம் புதிதாகத் தன்னை நோக்கி மந்தகாசம் செய்வது போல தோன்றியது ஸங்கனுக்கு. அந்த மந்தகாசத்துக் காரணம் என்னவென்று தெரியாமற் போனாலும் அர்ச்சனையில் மனத்தைப் பதிய வைத்தான் ஸங்கன். அவன் மனம் பயத்தை உதறியது, ஆபத்தை நினைப்பதை அறவே தவிர்த்தது. தாயான ஜாலிவம்சத்து ராணியால் குழந்தைமுதல் பக்தி மார்க்கத்தில் பழக்கப் பட்டிருந்த ஸங்கன், மௌனமாய் ஆண்டவனெதிரே நின்று ஸஹஸ்ர நாமங்களையும் காதால் பருகிக் கொண்டிருந்தான். அர்ச்சனை முடிந்ததும் திரும்பிய அர்ச்சகர், எதிரே ஸங்கன் நின்றதைக் கண்டு பிரமித்தார். மணியடித்துக் கொண்டிருந்த அர்ச்சகர் திடீரென மணியை நிறுத்தி, ''இளவரசரைக் கவனிக்கவில்லை...'' என்று சமாதானம் சொல்ல முயன்றார்.

''அரசர்க்கரசனுக்குப் பூஜை செய்து கொண்டிருந்தீர்கள். அப்போது மாநில மன்னர் குலத்தாரைக் கவனிப்பதும்



தவறு. ஆண்டவன் பூஜையில் திளைப்பது தான் நியாயம். தீர்த்தம் கொடுங்கள்; துளசி கொடுங்கள்'' என்று ஸங்கன் கையை நீட்டினான். தீர்த்தக் கிண்ணத்தை அர்ச்சகர் கையிலேந்தினார். அதிலிருந்து ஓர் உத்திரணியில் தீர்த்தத்தை மொண்டு எடுத்தார். ஆனால், அந்தத் தீர்த்தம் நீட்டிக்கிடந்த ஸங்கன் கைகளில் விழவில்லை. ஏந்திய உத்திரணி ஏந்தியபடியே நின்றது. அர்ச்சகரின் கண்கள் வாயிற்படியை வெறித்து நோக்கின. அதில் மிதமிஞ்சிய பயம் தாண்டவமாடியது.

## அத்தியாயம்-4

# வாளும் கோலும்

சதுர்ப்புஜனின் ஆராதனைத் தீர்த்தத்தைக் கொடுக்க எழுந்த அர்ச்சகரின் கை அப்படியே நிலைத்து நின்று விட்டதையும் அவருடைய கண்களும் வாயிற்படியை வெறித்து நோக்கிப் பீதிகொண்டு விட்டதையும் கண்ட ஸங்கன், அதன் காரணத்தை அறிய விரும்பித் திடீரெனத் திரும்பினான். கர்ப்பக்கிரகத்துக்குச் சற்றுத் தள்ளிப் பத்துப்பன்னிரண்டு வீரர்கள் உருவிய வாளும் கையுமாய் நிற்பதைப் பார்த்த ஸங்கன், அவர்கள் தன்னை தீர்த்துக் கட்டவே வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட தன்றி, அவர்களை ஏவியவன் தன் தம்பியைத் தவிர வேறு யாருமிருக்க முடியாதென்றும் ஊகித்துக் கொண்டானாகை யால், அவர்களை நோக்கி, ''தெய்வ சந்நிதானத்தில் வாளை உருவுவது ராஜபுத்திரர்கள் வழக்கமல்ல. வெளியே

பதுங்கியிருக்கும் ஜெய்மல்லுடன் நில்லுங்கள். இதோ வந்து உங்களைத் திருப்திப்படுத்துகிறேன்'' என்று கூறிவிட்டு மீண்டும் அர்ச்சகரைப் பார்த்துத் திரும்பி, ''தெய்வகாரியம் நிற்க வேண்டாம். தீர்த்தமும் துளசியும் கொடுங்கள்'' என்று பழையபடி கை நீட்டினான்.

அர்ச்சகர் அவன் துணிவைக் கண்டு அசந்து போனார். எப்பேர்ப்பட்ட வீரனாயிருந்தாலும் பத்துப் பன்னிரண்டு பேர் முன்பு என்ன செய்ய முடியும் என்று எண்ணினார். அத்துடன், யோசனைகளுக்கோ விவாதத்துக்கோ அப்பொழுதிருந்த நிலைமை இடங்கொடாதென்ற காரணத்தால், உத்திரணியை மற்றுமொரு முறை தீர்த்த பாத்திரத்தில் மொண்டு எடுத்து தீர்த்தத்தை ஸங்கன் கையில் கொடுத்தார். தீர்த்தத்தை மிகுந்த பயபக்தியுடன் உறிஞ்சி, துளசியும் உண்டு, தனது இடக்கையில் தங்கத்தால் செய்து பூட்டப்பட்டிருந்த ராஜமுத்திரைக் கங்கணத்தைக் கழற்றி சதுர்ப்புஜன் திருவடிகளில் வைத்து, அர்ச்சகரை அழைத்து ''ஸ்வாமி! இந்தக் கங்கணம் இங்கேயே இருக்கட்டும். அவசியம் வரும்போது உங்களிடம் தூதனை அனுப்புகிறேன். நீங்களே எடுத்து வாருங்கள்'' என்று கூறிவிட்டு, மறுபடி வாசற்படியை நோக்கித் திரும்பினான்.

பழைய இடத்தில் நின்ற வீரர்களில் ஒருவன்கூட இல்லாததைக் கவனித்த ஸங்கன் திருப்தியுடன் புன்முறுவல் செய்துகொண்டு, ''வருகிறேன், ஸ்வாமி'' என்று அர்ச்சகரிடம் கூறிவிட்டுக் கிளம்ப முயன்றவனை அர்ச்சகர் தடுத்து, ''அரசகுமாரா! வீரர்கள் வாயிற் பக்கந்தான் போயிருக்கிறார்கள்'' என்றார்.

''அங்குதான் அவர்களைப் போகச் சொன்னேன்'' என்ற ஸங்கன், வாயிலுக்காகக் காலை மறுபடியும் எடுத்து வைத்தான்.



மறுபடியும் அவனை அர்ச்சகர் தடுத்தார். ''அரசகுமாரா! நீ அடுத்தபடி முடிசூட வேண்டியவனாயிற்றே!'' என்றார்.

''இருந்தால் முடிசூட வேண்டியவன்தான்'' என்றான் ஸங்கன், சர்வ சாதாரணமாக.

''இருக்கும் பொறுப்பும் முடிசூட வேண்டியவர்களுக்கு உண்டு. அவர்கள் உயிர், குடிகள் சொத்து. இஷ்டப்படி அதைப் போக்கிக் கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை'' என்று மீண்டும் மன்றாடினார் அர்ச்சகர்.

''இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?'' என்று ஸங்கன் கேட்டான் வியப்புடன்.

''இந்தக் கர்ப்பக்கிரகத்தின் பின்புறத்தில் ரகசிய வழி இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினார் அர்ச்சகர்.

''அதில் போவது தர்மமல்ல.''

''ஏன்?''

''வாயிலில் வந்து போராடுவதாக வீரர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். அந்த வார்த்தையை நம்பி இங்கு ரத்தம் சிந்தாமல் அவர்கள் வெளியில் போயிருக்கிறார்கள். ஸங்கன் வார்த்தை தவறமாட்டான் என்பது மேவாரில் அனைவருக்கும் தெரியும். அந்த நற்பெயரைக் கெடுத்துக் கொள்ள முடியாது. வீரன் சண்டைக்குப் பயந்து கோழையாகக் கோயிலின் பின்புறத்தில் ஓடவும் முடியாது. தவிர, எனக்குப் பாதுகாப்பும் இருக்கிறது. என்னை யாரும் அழிக்கவும் முடியாது.''

''என்ன பாதுகாப்பு, அரசகுமாரா?''

''சாருணீதேவியின் மஞ்சள் காப்பு என் நெற்றியிலிருக்கிறது. மஞ்சளின் சம்பந்தம் எனக்கிருக்கும் வரை எனக்கு அழிவில்லை என்று தபஸ்வினி கூறியிருக்கிறாள்.''

ஸங்கனின் உறுதியான இந்தச் சொற்களைக் கேட்ட அர்ச்சகர் ஆச்சரியப்பட்டுப் போனார். 'தெய்வத்திடமும் கோவில் பூஜை செய்பவர்களிடமும் இத்தனை திட நம்பிக்கையுள்ளவர்களும் உலகத்திலிருக்கிறார்களே!' என்று வியப்பெய்தினாலும், ''அரசகுமாரா! தெய்வ நம்பிக்கையால் சித்திக்காதது எதுவுமில்லை. ஆனால், மனித எச்சரிக்கையும் அவசியமல்லவா?'' என்று வினவினார்.

ஸங்கன் அவரை நோக்கிச் சிரித்தான். ''தெய்வத் தனம் குறுக்கிடும்போது மனித எச்சரிக்கை அர்த்தமற்றதாகிறது'' என்று கூறிவிட்டு, மேற்கொண்டு எதுவும் பேசாமல், இடையிலிருந்த வாளை உருவி, தெய்வத்தின் காலடியில் தாழ்த்தித் தன் தலையையும் நன்றாகத் தாழ்த்தி வணங்கிவிட்டு வாயிலை நோக்கிச் சென்றான். அவன் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த இரு அர்ச்சகர்களும் பயத்தால் ஒரு விநாடி நடுங்கினார்கள். அடுத்த விநாடி சதுர்ப்புஜன் சந்நிதிக் கதவை நன்றாகச் சாத்திக் கொண்டார்கள். அடுத்த சில விநாடிகளில் வெளியே வாள்கள் உராயும் சத்தம் கேட்டது. இளவரசனை எப்படியாவது பாதுகாக்க வேண்டுமென இரு அர்ச்சகர்களும், சதுர்ப்புஜனைத் துதிக்க ஆரம்பித்தார்கள்.

உருவிய வாளுடன் கோவில் வாயிலை ஸங்கன் அடைந்ததுமே இரண்டு பக்கங்களிலிருந்து இரு வீரர்கள் அவன் மீது பாய்ந்தார்கள். எதிரேயிருந்தும் இருவர் வாள்களைப் பாய்ச்சினர். சற்று முன்னே நகர்ந்தால் பின்



புறமும் மற்றவர்கள் தன்னை வளைத்துக் கொள்ளக் கூடும் என்று நினைத்த ஸங்கன், கோயிலின் முன்புறச் சுவரோரமாகச் சாய்ந்துகொண்டு வெகு துரிதமாக முன் புறத்திலும் பக்கவாட்டிலும் வாளைச் சுழற்றினான். இலக்கு பார்த்து மந்திரத்தில் சுழல்வதுபோல் சுழன்ற ஸங்கனின் நீண்ட வாள் தாக்கியதால் பக்கப் பகுதிகளிலிருந்து இருவர் அலறி வீழ்ந்தனர். எதிரே வந்தவர்களில் ஒருவனின் வாள் ஆகாயத்தில் பறந்தது. இந்த நிகழ்ச்சிகளால் முதன் முதலாகப் பாய்ந்த வீரர்களின் தாக்குதல் சற்று தேக்கமடையவே மரங்களின் பின்னாலிருந்த ஜெய்மல்லின் குரல் எழுந்தது. ''விடாதீர்கள்! உம், போங்கள், வளைத்துக் கொள்ளுங்கள் அவனை'' என்று உற்சாகப்படுத்தியது. ஆரம்ப நிகழ்ச்சிகளால் தங்கள் பலத்தில் சந்தேகமடைந்த வீரர்கள் சற்று தாமதிக்கவே; ஒற்றைக் கண்ணுடன் நிலைமையை ஆராய்ந்து பலமாக நகைத்த ஸங்கன், ''வெளியே வா, தம்பி! சூரிய வம்சத்திலுதித்தவர்கள் பின்னால் தங்கி வீரர்களை முன்னால் ஏவுவது கிடையாது'' என்று அழைத்தான்.

அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளாத ஜெய்மல், ''உம்! விடாதீர்கள் அவனை. ஒருவன் சாருணீ தேவியின் ஆலயத்தில் இறந்துவிட்டான். இன்னொருவன் சதுர்ப்புஜனுக்குப் பலியாகிவிட்டால் நான்தான் அரசன். உங்களுக்குப் பதவிகள் தருவேன், பொற்காசுகளை அள்ளிக் கொட்டுவேன். இல்லையேல், நீங்கள் தலைநகர் திரும்பியதும் இவனுக்குப் பதில் உங்களை அழித்து விடுவேன்'' என்று கூவினான்.

பதவி, பொன் ஆசைகளைக் காட்டியதாலும், சொன்னபடி செய்யாவிட்டாலும் தலைநகரில் காத்திருக்கும் தண்டனையைக் காட்டி ஜெய்மல் பயமுறுத்தியதாலும்

தூண்டப்பட்ட வீரர்கள் மீண்டும் ஸங்கனை நோக்கி வந்தார்கள். விளைவைப் பற்றி எப்பொழுதுமே சிந்திக்காத ஸங்கன் நன்றாகக் கோயில்சுவரில் சாய்ந்து கொண்டு, தனது வாளால் முப்புறத்திலும் சூழ்ந்த வாள்களைத் தேக்கினான். மீண்டும் பின் சென்று, முன் வந்து தாக்கிய வாள்களை மிகச் சாமர்த்தியமாகத் தடுத்தும், இடைவெளி கிடைத்த சமயங்களில் எதிரிகளின் உடல்மீது வாளைப் பாய்ச்சியும் போரிட்டான். ஒரு கண் கட்டுப்போட்டிருந்ததாலும், உடலில் ஏற்கெனவே பிருத்விராஜன் வெட்டிய காயங்களாலும் கோயில்வாயிற் சிறு விளக்கில் ருத்திரன் போல பயங்கரமாகத் துலங்கிய அவன் உருவத்தைக் கண்டும், வாள் தங்களை அணுகும் வேகத்தைக்கண்டும், தாக்கிய சமயங்களில் அந்த வாளுக்கிருந்த அமானுஷ்ய பலத்தைக் கண்டும் அஞ்சிய வீரர்கள், மெள்ள மெள்ள இடைவெளி கொடுக்கத் தொடங்கினார்கள். ஆள்பலம் அதிகமிருந்தாலும் மனோபலம் குறைபவர்கள் காரிசித்தியடைய முடியாதென்ற தீர்மானத்தால் உந்தப்பட்ட ஸங்கன் சட்டென்று சுவரை விட்டு விலகி, எதிரே திடீரெனப் பாய்ந்து, எதிரேயிருந்த இருவர்மீது வாளைப் பாய்ச்சி இழுத்தான். அடுத்த சில விநாடிகளுக்குள் நாலைந்து வீரர்கள் ஸங்கன் வாளுக்குப் பலியாகிவிட்டதை மறைவிலிருந்து பார்த்த ஜெய்மல் பெரும் பீதியடைந்தான். அவன் மட்டும் அன்று அச்சத்துக்கு இடங்கொடாதிருந்தால், மேவாரின் அரியணை அவனுக்கு நிச்சயமாய்க் கிடைத்திருக்கும். ஆனால், உரமில்லாத அவன் இதயத்தில் அச்சம் புகுந்து கொண்டதால், தனது முயற்சி தோல்வியடைந்துவிடுமென எண்ணித் திடீரெனத் தன் புரவியில் ஏறிப் புரவியைத் தட்டினான். எதிர்பாராத விதமாகப் புரவியின் காலடிச் சத்தம் கேட்டதும் மருண்டு ஒரு கணம் விழித்த அவ்வீரர்கள், தலைவன் ஓடிவிட்டானென்பதை அறிந்ததும் விடுவிடென்று பின்வாங்கினார்கள். அவர்கள் பின்வாங்கியதும் அவர்களைத் துரத்த முற்பட்ட ஸங்கன் மற்றுமிருவர்களை வெட்டிச் சாய்த்தான். அந்த இரு வீரர்கள் சாய்ந்த சில விநாடிகளுக்குள்ளாக வாள்களின் சத்தம் மறைந்து, புரவிகள் ஓடும் காலடிச் சத்தம் தோப்பை ஆட்கொண்டது. அந்தச் சத்தமும் மெள்ள மெள்ள அடங்கவே, எதிரே மாண்டு கிடந்தவர்களை நோக்கினான் ஸங்கன்.

ஆறு பேர் இறந்து கிடந்தார்கள். மற்றும் சிலர் குற்றுயிருடனிருந்தார்கள். அவர்கள் குருதியையும் மண் உறிஞ்சிக்கொண்டிருந்தது. தபஸ்வினி தன்னை இங்கு செல்ல வேண்டாமென்று கூறியது எத்தனை சரியாகிவிட்டதென்பதை உணர்ந்த ஸங்கன், அவள் தீர்க்க திருஷ்டியைப் பெரிதும் வியந்தான். அந்தத் தீர்க்க திருஷ்டியால் முளைத்த நம்பிக்கை அவன் ஆயுட்காலம் பூராவும் இருந்தது. அந்த நம்பிக்கை முளைத்த அந்தச் சமயத்தில்கூட பிருத்விராஜனையும் மாமனையும் எண்ணிய ஸங்கன் மீண்டும் ஆலயத்துள் சென்று அர்ச்சகர்களை அழைத்து, சாருணீ தேவி ஆலயத்துக்கு ஆட்களை அனுப்புமாறு கூறினான்.

ஸங்கன் வந்து அழைத்ததும் மிகுந்த பயத்துடன் கர்ப்பக்கிரகத்தின் கதவைத் திறந்த அர்ச்சகர்கள் உருவிய வாளுடன் அவன் நிற்பதைப் பார்த்து, அவன் வெற்றியடைந்துவிட்டான் என்பதைப் புரிந்துகொண்டாலும் அவன் இடத்தோளிலும் மார்பிலும் புதிதாகக் கத்திக் காயங்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு, "அரச குமாரா! காயங்கள் பலமாயிருக்கின்றனவே" என்றார்கள்.

''அதற்கு என்ன செய்யவேண்டும்!'' என்று கேட்டான் ஸங்கன்.

''கிராமத்துக்குள் சென்றால் மருத்துவர்கள் இருக்கிறார்கள்'' என்றார் அர்ச்சகர்களில் ஒருவர்.

''மருத்துவத்துக்கு இது சமயமல்ல. நான் சீக்கிரம் செல்ல வேண்டும். சாருணீ ஆலயத்தில் காயமடைந்த இருவர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ மனிதர்களை அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் கோயிலைவிட்டு வெளியே வந்து, தன் புரவியில் ஏறிக் கொண்டான். ஏறியதும் சில அடிகளே செலுத்தியிருப்பான். பிறகு யோசனை வந்ததால் சேணத்தை இழுத்து அதை நிறுத்தினான். மீண்டும் சித்தூர் சென்று நடந்ததைத் தந்தையிடம் தெரிவித்தாலென்ன என்று நினைத்தான். தந்தையிடம் தெரிவித்தால் நீதி செயலாற்றும், தர்மந்தவறாத மேவார் ராணா மல்லர், பட்டத்து இளவரசனைக் கொல்ல முயன்ற குற்றத்துக்காகத் தம்பிகளிருவரையும் தேசப் பிரஷ்டம் செய்வார் அல்லது கொன்று விடுவார் என்று எண்ணிய ஸங்கன், 'கேவலம், மண்ணாசைக்காகத் தம்பிகளை இழப்பதா? பிருத்விதான் அரியணையில் அமரட்டுமே. நான் ஓடி விட்டதாகவே இருக்கட்டும்'' என்று கூறிக் கொண்டதன்றி, ''தேவியின் ஆணைப்படி நான் நடக்க, மஞ்சளாற்றங்கரைக்குத்தானே போக வேண்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டான். ஆகவே, மேவாரின் வடக்கெல்லையை நோக்கிப் புரவியை நடக்கவிட்டான்.

அடுத்த இரண்டு நாள்கள் இடைவிடாது பயணம் செய்தபின் மஞ்சளாற்றங்கரைக்குச் சற்று முன்னாலிருந்த பிரமரர்களின் அரசன் கரம்சந்தின் ஆடுகள் மேயும் சமவெளியை அடைந்தான். அவன் அந்தப் புல் வெளியை



அடைந்தபோது கதிரவன் உதயமாகிவிட்டதால் மஞ்சள் வெயில் நன்றாகக் காய்ந்து கொண்டிருந்தது. ஏராளமான செம்மறியாடுகள் எங்கும் மேய்ந்துகொண்டிருந்தன. அங்கிருந்த யாதவன், யாரோ ஒரு வீரன் புரவிமீது வருவதைக் கவனித்ததும், மந்தைக்குள் புகுந்து வந்து, தன் கழியைத் தரையிலூன்றி, ''யார் நீ?'' என்று விசாரித்தான்.

''நீண்ட தூரத்திலிருந்து வேலை தேடி வந்திருக்கிறேன்'' என்றான் ஸங்கன்.

''என்ன வேலை தெரியும் உனக்கு?'' என்று கேட்டான் யாதவன்.

''போரிடத் தெரியும்?'' என்றான் ஸங்கன்.

அதைக் கேட்ட யாதவன் பெரிதாக நகைத்தான். ''போருக்கு நீ லாயக்கில்லையப்பா!'' என்றும் கூறினான்.

ஸங்கன் இதழ்கள் புன்முறுவலால் விரிந்தன. ''போருக்கு நான் லாயக்கில்லையா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்கவும் செய்தான்.

''ரத்தமும் காயமுமாக நீ வந்திருப்பதிலிருந்தே எங்கிருந்தோ தோற்று ஓடி வந்திருக்கிறாய் என்பது தெரிகிறது'' என்று கூறிய யாதவன், ஸங்கன் முகம் சோர்ந்திருப்பதைப் பார்த்து, ''என் குடிசைக்கு வா, குளித்து உண்டு சற்று இளைப்பாறு'' என்று அழைத்துக் கொண்டு போனான்.

யாதவன் உதவியால் நீராடிக் காயங்களைக் கழுவி, அவன் போட்ட பச்சிலை மருந்தையே ஏற்று தன் ஆடைகளுக்குப் பதில் அவனளித்த இடையர்கள் ஆடையை அணிந்த ஸங்கன், தன்னை விதி அழைத்துச் செல்லும்

பாதையை நினைத்துப் பெரிதும் வியந்தான். யாதவன் குடிசையிலிருந்து புல்வளர்ந்த சமவெளியின் மனோகரத் தோற்றத்திலும் அந்த வாழ்க்கையின் மன அமைதியிலும் மனத்தைப் பறி கொடுத்து, அந்த இடையனுடன் தங்கிய நாலைந்து நாட்களில் பல இடையர்கள் அவனுக்கு நண்பர்களாயினர். இடையர்களில் ஒரு இடையனாக, தன்னை ஆதரித்த இடையனுக்குக் கையாளாக ஊழியம் புரியத் தொடங்கினான், மேவாரை ஆளவேண்டிய இளவல்.

அரச உடை உடுத்திய மேனி ஆட்டிடையன் கம்பளியைப் போர்த்திக் கொண்டது. வாள் பிடித்த கை, ஆடு ஓட்டும் கோலைப் பிடித்தது. ஆனால், வாளைச் சுழற்றத் தெரிந்த வன்மை கோலைச் சுழற்றுவதில் தனக்கு இல்லாததை லங்கன் வெகு சீக்கிரம் உணர்ந்தான். அவன் கோலுக்கு அடங்கா ஆடுகள் மந்தையிலிருந்து பிரிந்து ஓடின. யாதவன் பலமுறை அவனைக் கடிந்து கொண்டான். "கோலைப் பிடித்து ஆட்டை வளைக்கத் தெரியாத நீ எதைத்தான் சரியாகச் செய்ய முடியும்?" என்று பல பேர் முன்னிலையில் கண்டிக்கவும் தொடங்கினான்.

அந்த கண்டனம் மற்றொருவர் வாயாலும் வந்தது. அந்த இடத்தை அடைந்த பத்தாம் நாள் மஞ்சள் வெயில் காய்ந்து கொண்டிருந்த சமயத்தில் ஆடுகள் சில மந்தையிலிருந்து விலகி ஓடவே, கோல் கொண்டு கண் மண் தெரியாமல் ஓடி, எதன்மீதோ மோதிக்கொண்டு திடீரென நிலத்தில் விழுந்தான். விழுந்தவன் தன் தலையைத் தூக்கி எதிரே பார்த்ததும், விழுந்தது தான் மட்டுமல்ல வென்பதைக் கண்டு கொண்டான். எதிரே சற்றுத் தூரத்திற் கப்பால் ஸ்வர்ணபிம்பம் போன்ற ஒரு கட்டழகியும் நிலத்தில் விழுந்து கிடந்தாள்.



### அத்தியாயம் – 5

# சொர்ணாதேவி

கண்மண் தெரியாமல் ஆடுகளை விரட்டியோடி எதன் மீதோ மோதித் தரையில் விழுந்த லங்கன் தலையை நிமிர்ந்து நோக்கியதும், தான் மோதியது ஒரு புரவி என்பதையும், தன் மோதலின் விளைவாகவே புரவி, எதிரே விழுந்து கிடந்த பெண்ணை முதுகிலிருந்து உதறியிருக்க வேண்டுமென்பதையும் புரிந்துகொண்டான். அப்படிப் புரிந்துகொண்ட அந்த நேரத்திலும் சட்டென எழுந்திருந்து அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்கவோ புரவியை மீண்டும் கடிவாளத்தைப் பிடித்து அவள் கையில் ஒப்படைக்கவோ அவன் மனம் இடம் தரவில்லை. அவள் அழகைக் கண்டு மனம் செயலற்றுக் கிடந்தது.

புரவியிலிருந்து தரையில் விழுந்துவிட்ட அந்தச் சமயத்திலும் அந்த மங்கை, மிக ஒய்யாரமாக இயற்கையின் கலைக்கரம் வீசிய சிற்பக் கொடி போல் கிடந்ததை லங்கன் கவனித்தான்.

சற்றே ஒருக்களித்து ஒருபுறமாக விழுந்துவிட்ட அந்தப் பாவை, தன் இடக்கையை ஊன்றி லேசாகத் தலையைத் தூக்கியபோது, அவள் அழகிய கண்கள் லங்கன் நோக்கி நெருப்பைக் கக்கின வென்றாலும் லங்கன் கண்களில் அந்தக் கனல் படவில்லை. அந்தக் கூர்வேல்கள் இரண்டின் கடுமையையே லங்கன் விழிகள் ஆச்சரியத்துடன் ஆராய்ந்தன. கோபத்திலும் அழகு உண்டானால் அதற்கு உவமை தன் எதிரிலேயே இருப்பதை உணர்ந்த

அந்த அரசகுமாரன், புரவியிலிருந்து விழுந்த அதிர்ச்சியில் அவள் ஆடைகள் கலைந்திருந்ததன் காரண மாகப் பத்தரை மாற்றுப் பசும் பொன்னையும் பழிக்கும் அவள் மஞ்சள்நிற மேனியின் பார்க்கவொண்ணாப் பகுதிகள் சிலவும் லேசாக வெளிப்பட்டுக் கிடந்ததையும் கவனித்தான். அப்படி கண்ணுக்குப் புலனான அவள் மார்பக விளிம்பின் திண்மையும், ஒரு காலின் முழந்தாளுக்கு மேலே மிகச் சிறிய அளவிலே தெரிந்த உருண்டதும் பட்டைவிட மென்மையானதுமான தொடையின் முன்புறமும் மாலையின் மஞ்சள் நிற வெயிலில் அதிக ஒளி பெற்றுத் திகழ்வதைக் கண்ட ஸங்கன், 'எது எதற்கு அழகு தருகிறது; இவள் மேனிக்கு மாலை வெயில் மெருகு கூட்டுகிறதா? அல்லது இவள் மேனி வெயிலுக்கில்லாத புது மெருகை அளிக்கிறதா?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அந்தச் சொர்ணப் பாவையின் அங்கங்களிலெல்லாம் அந்த வாலிபன் கண்கள் விழுந்து புரண்டன. விசாலமான நெற்றியைத் திடீரெனச் சந்திரனைச் சூழ வரும் மேகம் போல் கவித்து, ஆனால் தடைப்பட்டுவிட்ட நிலையிலிருந்த அவள் கருங்குழல், வளைந்த கருத்த புவருங்கள், சற்று எடுப்பான நாசி, கோபத்தால் துடிதுடித்த சமயத்திலும் சற்றே மடிந்ததோடு தேன் துளிர்க்கும் செம்பருத்தி மலர் இதழ்கள் போல் கவர்ச்சியுடன் காட்சியளித்த உதடுகள், புரவியிலிருந்து விழுந்த மேலாடை சற்று விலகிக் கச்சை மட்டுமே இருந்ததால் அந்தக் கச்சையை மீறித் தெரிந்த மார்பக விளிம்புகள், அந்த



அவன் தன்னை அணு அணுவாக ஆராய்வதைக் கண்ட அந்த அழகி திடீரென எழுந்தாள். கோபத்துடன் இரண்டடி எடுத்தும் வைத்தாள். ஆனால், நடப்பது அவ்வளவு எளிதாயில்லை. அவள் கால், சுளுக்கிக் கிடந்தது. சற்றுச் சிரமப்பட்டே நடந்தாள் அவள். அவள் நொண்டி நடந்த சமயத்தில் அவள் இடை எத்தனை சிறியதாக, எத்தனை அழகாக அசைந்தது என்பதைக் கவனித்தான் ஸங்கன். இடைக்குக் கீழே தொகுக்கப்பட்டு நின்ற கால்களின் ஆரம்பப் பகுதிகள் எத்தனை திண்மை என்பதையும் பார்த்த அவன், அடியோடு நிலைகுலைந்து விழுந்தபடியே கிடந்தான்.

மிகவும் சிரமப்பட்டு நடந்துவந்த அந்த அழகி, ஸங்கனுக்குச் சற்று எட்ட நின்று, ''டேய், எழுந்திரு'' என்று கட்டளையிட்டாள். அந்தக் கட்டளையைத் தாங்கிய சொற்கள் மிகுந்த உஷ்ணத்துடன் உதிர்ந்ததைக் கண்ட ஸங்கன் மெள்ள புன்முறுவல் செய்தான்.

அவன் புன்முறுவலைக் கண்ட அவள் கோபம் முன்னைவிட அதிகமாயிற்று. ''எதற்குச் சிரிக்கிறாய்?'' என்று எரிந்து விழுந்தாள்.

''விழுந்ததில் லேசாகக் காயம் பட்டிருக்கிறது.'' ஸங்கன் பதில் சாதாரணமாக வெளிவந்தது.

''காயம் பட்டால் சிரிப்பார்களா?''

''வேறென்ன செய்வார்கள்?''

''அழுவார்கள்.''

இதைச் சொல்லிக்கொண்டே மெள்ள எழுந்த ஸங்கன் சற்று தூரத்தில் விழுந்து கிடந்த தன் கோலைக் கையில் எடுத்துக்கொண்டான். அவன் மிகச் சாவதானமாக எழுந்ததையும், நிதானமாகக் கோலை எடுத்துக் கொண்டதையும், தன்னைப் புரவியிலிருந்து தள்ளியதற்கு ஒரு வார்த்தைகூட மன்னிப்புக் கேட்காததையும் கண்ட அந்த அழகி, அவனைத் தன் கண்களால் சில விநாடிகள் எரித்து விடுபவள்போல் பார்த்தாள். ஆனால் சில விநாடிகளில் அந்தக் கோபக் கனல் அவள் அழகிய விழிகளிலிருந்து மறைந்தது. அவன் முகத்தைக் கூர்ந்து அவள் வேல் விழிகள் ஆராய்ந்தன. எதையோ நினைவு படுத்திக் கொள்ள முயல்வதுபோல் அவள் நெற்றி சுளித்தது. புருவங்கள் மெள்ள நெருங்கின. எதையோ யோசித்து முடிவு காணாதவள் தலையை ஒருமுறை ஆட்டிக் கொண்டாள். பிறகு, கடைசியாக ஸங்கன் சொன்ன பதிலை நினைத்துத் தன் செவ்விய இதழ்களில் லேசான புன்முறுவலொன்றைப் படரவிட்டுக் கேட்டாள், "நீ என்ன வேதாந்தியா?" என்று.

"எதற்குக் கேட்கிறீர்கள்?" என்று வினவினான் ஸங்கன், அவள் அழகிய பிரதேசங்களில் கண்களை உலாவ விட்டு.

"காயம் பட்டால் சிரித்தாயே?"

"ஆம், சிரித்தேன்."

"அழுகையும் சிரிப்புக்குச் சமம் என்று சுட்டிக் காட்டினாயே?"

"ஆமாம்."



"ஆம்"

அதுவரை நிதானமாகப் பேசி வந்தவள் இதைச் சற்று பெருங்கோபத்துடன் கேட்டாள், "பெண்களை வெறித்து வெறித்துப் பார்ப்பதும் வேதாந்தியின் வேலையோ?" என்று.

ஸங்கன் தலையைத் தாழ்த்திக்கொண்டான். பிறகு சொன்னான், "அதுவும் ஒரு வகையில் வேதாந்தியின் அலுவல்தான்" என்று.

கோபத்திலும் அவள் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. "அழகையும் ஆராய்வது வேதாந்தியின் வேலையா?" என்று வினவினாள்.

"ஆம்; அழகு ஆண்டவன் கரங்களிலிருந்து மலர்வது. அதைக் காண்பதில் ஆண்டவனைக் காண்கிறோம்."

"அப்படியானால் என்னிடத்தில் ஆண்டவனிருக்கிறானா?"

"இல்லாவிட்டால் இத்தனை அழகு இருக்காது."

"என்னிடத்தில் ஆண்டவனைக் கண்டாயா, அழகைக் கண்டாயா?"

"இரண்டையுந்தான்."

"புரியவில்லை எனக்கு!"

"அழகு வேறு, ஆண்டவன் வேறல்ல."

"நல்ல வேதாந்தம் இது. இந்த வேதாந்தத்தை எல்லோரும் கடைப்பிடித்தால் என்ன ஆகும்?"

"வேதாந்தத்தை எல்லோரும் கடைப்பிடிக்க முடியாது."

"என்?"

''அப்படியா?''

''ஆம்; ராவண கிருகத்தில், நிலையும் ஆடையும் குலைந்த பல ஸ்திரீகளை அனுமார் பார்த்தார். அவர் மனம் சலிக்கவில்லை. அது வேதாந்தியின் பார்வை. அழகை ரசிக்கும் ஆனால், பொருளில் மனத்தைச் செலுத்தாது.''

ஸங்கன் வேதாந்தம் பேசியது அந்தப் பெண்ணுக்குப் பெரும் விசித்திரமாயிருந்தது. அவன் காட்டிய காவிய உவமை இன்னும் ஆச்சரியத்தை அளித்தது. ஒரு கண் இழந்து, அடிபட்ட சிங்கம்போல் நின்ற அவன் திடத்தைப் பார்த்து, 'இவன் எதையோ மறைக்கிறான். இவன் ஆட்டிடையனாயிருக்க முடியாது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அவள் யோசனை செய்வதைக் கண்ட ஸங்கன் பணிவுடன் வினவினான், ''என்ன யோசிக்கிறீர்கள் தேவி?'' என்று.

''வேதாந்தி உண்மை பேச வேண்டியது அவசியமா?'' என்று கேட்டாள் மெல்லச் சிரித்து.

''வேதாந்தத்தின் அடிப்படையே உண்மை'' என்றான் ஸங்கன்.

அவளுடைய அடுத்த கேள்வியைக் கேட்ட ஸங்கன் அதிர்ச்சியடைந்தான். ''அப்படியானல் நீ யார்? உண்மையைச் சொல்'' என்றாள்.

கேள்வியைக் கேட்டுச் சிறிது நேரம் திகைப்பால் மௌனம் சாதித்தான் மேவார் இளவரசன். பிறகு, திடப் படுத்திக் கொண்டு கூறினான்: ''தற்சமயம் ஆடு மேய்ப்பவன்.''

''இதற்கு முன்பு?'' -மீண்டும் எழுந்தது கேள்வி.

''கிட்டத்தட்ட இப்படி ஒரு வேலைதான்'' என்றான் ஸங்கன்.



நொடிப் பொழுதில் உண்மையைப் புரிந்து கொண்டாள் அவள். உண்மை திடீரெனப் புத்தியில் பளிச்சிட்டதால் சில விநாடிகள் ஏதும் பேசாமல் நின்றாள். பிறகு திடீரெனப் புரவியில் ஏறிச் சென்றுவிட்டாள்.

அவள் போகும் திக்கைப் பார்த்துக்கொண்டே நின்ற ஸங்கன், புரவியில் திடமாக அவள் அமர்ந்து சென்ற முறையிலிருந்தும், அலட்சியமாக அவள் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு தலையைத் திருப்பித் தன்னைப் பார்த்ததையுங் கண்டு, 'இவள் சாதாரணப் பெண்ணாயிருக்க முடியாது, அரசகுமாரிதான்!' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு பெருமூச்செறிந்ததன்றி, அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து மெள்ளச் சிரிக்கவும் செய்தான். 'என் வாழ்வே ஒரு பெரும் கதை! மன்னன் இடையனாவதும் இளவரசியைச் சந்திப்பதும் காதலிப்பதும் கதைகளில் நடக்கும். வாழ்வில் இது புதுமை! இதென்ன? என் வாழ்வில் சகலமும் புதுமை! அரசை இழக்க நான் சாருணீதேவியின் ஆலயத்துக்குச் சென்றதும் புதுமை! கண்ணையிழந்ததும் புதுமை! இங்கு ஆடு மேய்ப்பதும் புதுமை! இன்னும் எத்தனை எத்தனை புதுமையோ!' என்று நினைத்து வியந்து நின்றான்.

அவன் அப்படிச் சிலைபோல் நின்ற சமயத்தில் யாதவனான மாரு வந்து, ''என்ன இப்படி நிற்கிறாய்? ஆட்டை யார் கவனிப்பது? மந்தையே கலைந்து விட்டதே'' என்று மிரட்டினான்.

யாதவர் தலைவன் வந்ததும், அதுவரை மந்தையின் மறைவில் பதுங்கிக்கிடந்த இடையர்கள் ஓடிவந்து, ''மாரு! மந்தை கலைந்தது மட்டுமல்ல! இவனால் இன்னோர் உபத்திரவமும் வந்திருக்கிறது'' என்று முறையிட்டார்கள்.

''என்ன அது?'' யாதவனான மாருவின் குரலில் பயம் நிரம்பிக் கிடந்தது.

''சற்றுமுன்பு சொர்ணாதேவி இங்கு வந்திருந் தார்கள்.''

''யார்! ஸ்ரீநகர் அரசகுமாரியா! ராம்கரம்சந்த்தின் மகளா!'' என்று வினவினான் மாரு.

''ஆம். இளவரசிதான் வந்திருந்தார்கள். அவர்களை இவன் புரவியிலிருந்து தள்ளிவிட்டான்'' என்று மிதமிஞ்சிய கிலியுடன் சொன்னார்கள் மற்ற யாதவர்கள்.

''சரி, தொலைந்தோம், நாளைக்கு இளவரசி வீரர்களுடன் வருவாள். மன்னர் என்ன செய்வாரோ! என்ன தண்டனை கிடைக்குமோ!'' என்று அலறினான் மாரு.

மாரு நினைத்ததுபோல் மறுதினமும் இளவரசி வந்தாள். ஆனால், வீரர்கள் வரவில்லை, தனிப்பட வந்தாள். அவள் புரவிக்கெதிரே மாரு, கைகட்டி வாய் புதைத்து நின்றான். ''நேற்று இங்கிருந்தாரே, அவர் எங்கே?'' என்று வினவினாள் சொர்ணாதேவி.

அவள் பேச்சைக் கேட்டு ஆச்சரியத்தால் ஸ்தம்பித் தான் யாதவனான மாரு. 'அவர் எங்கே! எத்தனை மரியாதை இந்தப் புதிய அடிமைக்கு!' என்று வியந்தான். பிறகு, பதிலேதும் சொல்லாமல் குடிசையைக் காட்டினான். குடிசையை நோக்கிச் சென்ற இளவரசி, புரவியிலிருந்து இறங்கிக் குடிசைக்குள் நுழைந்தாள்.

நுழைந்தவள், குடிசையின் உட்புறத்திலிருந்த காட்சியைக் கண்டதும் பல விநாடிகள் பேசாமலே மௌனமாக நின்றிருந்தாள். ஸங்கனின் முதுகுப்புறம் வாயிலை நோக்கித் திரும்பியிருந்ததாலும் உள்ளே நுழைந்த இளவரசியும் ஓசைப்படாமல் கதவைத் திறந்து வந்ததாலும்,



அவள் வந்ததை ஸங்கன் கவனிக்கவில்லை. அங்கிருந்த பெரும் மரக்கட்டைகளில் இரண்டு மூன்றினை உயரமாக அடுக்கி அவற்றின்மீது உட்கார்ந்து, முழங்கால்கள் மீது கைகளை ஊன்றியவண்ணம் எதிரே எரிந்துகொண்டிருந்த அடுப்பில் சோள அடைகளைத் தட்டிக் கொண்டிருந்தான்.

அவன் உட்கார்ந்திருந்த தோரணையையும், இறுகிய சதைப்பிடிப்பால் உரம் நிறைந்த விசாலமான அவன் முதுகையும், காளையின் முசுப்புகள் போல் எழுந்த திடமான தோள்களையும் கண்ட சொர்ணாதேவி, பெரிய வீரனொருவனைத் தான் நோக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தாள். அத்துடன், முதல் நாள் அவன் தன்னிடம் பேசிய வார்த்தைகளையும் நினைத்து, 'இவர் சாதாரண வீரரல்ல; ஏதோ அரசுக்கும் உரியவர். சந்தேகமில்லை. அதற்கு அந்தத் தோரணையே அத்தாட்சி' என்று, எழும்பிய தோள்களையும் மனத்திற்குள் சுட்டிக் காட்டிக் கொண்டாள். இப்படி ஒருத்தி தன்னை ஆராய்ந்து நிற்பதை அறியாமல் சோள அடைகளை அடுப்பில் சுட்டுக் கொண்டிருந்த ஸங்கன், அடைகளைத் திருப்பத் தெரியாமல் திருப்பவே, இரும்புச்சட்டி அவன் கையில் சுட. இரு முறை கையை உதறி, ''ச்சூ! ச்சூ'' என்று 'சூ'வும் கொட்டினான். அதைக் கேட்ட அவள் இன்பமாக நகைத்தாள்.

இன்னொரு முறை நெருப்புச் சுட்டவன் போல் ஸங்கன் திடீரென எழுந்து திரும்பினான். அவன் திரும்பிய வேகத்தில் சரிந்துவிட்ட அவன் மேலாடையிலிருந்து வெளிப்பட்ட அகன்ற மார்பையும், அதிலிருந்த பல தழும்புகளையும் கண்ட சொர்ணாதேவி, தன் ஊகம் சரிதானென்று முடிவு செய்துகொண்டதால் மீண்டும் ஒரு முறை நகைத்தாள்.